Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 03 (27.12.2003) சனிக்கிழமை இதழ்:87



'எரிக் கனேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கனேஷ்' (சு-1802)

# ஈரானில் பூமியதிர்ச்சி; 10 ஆயிரம் பேர் பலி!

## 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயம்!





(தெஹ்ரன்)

ஈரானின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள பாம் நகரில் நேற்று அதிகாலை 5.28 மணியளவில் இடம்பெற்ற பாரிய பூமி அதிர்ச்சியில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாகவும் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமுற்றிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஈரானிலுள்ள பழைமைவாய்ந்ததும், சரித்திர முக்கியத்துவம் மிக்க உல்லாசப் பயணிகள் அதிகளவில் விஜயம்செய்யும் பாம் நகரையே இந்தப் பூமியதிர்ச்சி தாக்கியது.

80 ஆயிரம் மக்கள் வசிக்கும் இந்த நகரத்தில் இருந்த 60 சதவீதமான வீடுகள், கட்டடங்கள் இந்தப் பூமி அதிர்ச்சியால் முற்றாக அழிந்துவிட்டன. ஆயிரக்கணக்கானோர் கட்டடச் சிதைவுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டக் கூடும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ் குடைசாய்ந்தது; வயோதிபர் பலி, 8 பேர் காயம்!

(யாழ்ப்பாணம்)

தனியாருக்குச் சொந்தமான மினி பஸ் ஒன்று, கடலுக்குள் குடைசாய்ந்து வீழ்ந்ததில், வயோதிபர் ஒருவர் பலியானதுடன் எட்டுப் பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் பண்ணைப் பாலப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அனலைதீவிலிருந்து படகுமூலம் யாழ். நகருக்கு வந்த பயணிகளை ஏற்றிக்கொண்டு, விபத்துக்குள்ளான பஸ் வந்துகொண்டிருந்ததாகவும், பண்ணைப் பாலத்திற்கு அண்மையாக வேறொரு வாகனத்திற்கு இடம்கொடுக்க முற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிக்கப் வாகனம் மோதி இளைஞன் கால் இழப்பு!

(மன்னார்)

பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் எதிரெதிரே மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் வலது காலை இழந்தார்.

இந்தச் சம்பவம் மன்னார் - பெரியபாலத்துக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றது.

மன்னாரில் இருந்து சென்ற பொது அமைப்பு ஒன்றின் வாகனம் ஒன்றை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் விலத்திச் செல்ல முற்பட்டபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்தில் வ.யூட் நிசாந்தன் (வயது 24) என்ற இளைஞரே வலது கால் துண்டிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீதிப்பணம் கேட்ட பயணியை அடித்துக்கொன்ற நடத்துநர்!

(கொழும்பு)

மீதிப்பணம் கேட்டதனால் ஏற்பட்ட முறுகல் நிலையால், பயணி ஒருவரை பஸ் நடத்துநர் அடித்துக் கொன்ற சம்பவம் கொழும்பு-புறக்கோட்டை பகுதிக்கு அண்மையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொழும்புக்கும் புறக்கோட்டைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 170 இலக்கத்தையுடைய தனியார் பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கொலை செய்யப்பட்ட முதியவரான பயணி, ரூபா 10 ஐக் கொடுதது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எய்ட்ஸ் குறித்த கருத்தரங்கு குடாநாட்டில் தொடர்கிறது!

(யாழ்ப்பாணம்)

எயட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்றும் தமிழீழ சுகாதார சேவையினராலும், அரசியற்துறையினராலும் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று நல்லூர்,தெல்லிப்பளை, நீர்வேலி, சங்கத்தானை, சண்டிலிப்பாய், உடுவில், வட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி தொலைபேசிகள் சீரற்ற நிலையில்!

(கிளிநொச்சி)

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் சீரான முறையில் இயங்கவில்லையென, பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்திய பின், கதைக்க முற்படும்போது அது செயலிழந்து விடுவதாகவும், தொலைபேசியுடன் இணைந்ததான தொலை நகல் (பக்ஸ்), சேவையினைப் பெறமுடியாதுள்ளதாகவும், பாவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் நால்வர் கரைதிரும்பவில்லை!

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நான்கு குருநகர் மீனவர்கள் கரைதிரும்பவில்லை எனத் தெரிவித்து, யாழ்.மனித உரிமைகள் அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி 1 மணியளவில் குருநகரிலிருந்து இரணைதீவுக் கடற்பரப்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகார இழுபறிக்குத் தீர்வுகாண இந்திய உதவியைக் கோர முடிவு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இடையில் உருவாகியுள்ள அரசியல் அதிகார இழுபறிப் போட்டியால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலையைத் தீர்ப்பது குறித்து இந்தியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் உதவியைப் பெறுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றுள்ள நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் நாட்டில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த அதிகார இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உதவியை இந்தியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிடம் பெறுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்த மாத முற்பகுதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்து தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

புதுடெல்கியில் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் மற்றும் எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை குறித்துப் பிரதமர் ரணில் விபரித்துக் கூறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பிரதமரின் விஜயத்துக்கு முன்னதாக இந்திய அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடி இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க இன்னும் சில தினங்களில் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட புதுடெல்கிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி - கந்தன்குளத்திலிருந்து

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

(கிளிநொச்சி)

தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் குளத்தில் இருந்து பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கந்தன்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

கந்தன்குளம் பகுதியில் உள்ள அயலவர்கள் குளப்பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து நாற்றம் வீசிய பகுதிக்குச் சென்று பார்த்தபோது பற்றை ஒன்றின் கீழ் நீரில் மிதந்தவாறு தலையில்லாத சடலம் ஒன்று இருந்ததைக் கண்டனர். தலையற்ற சடலத்தைக் கண்டதும் உடனடியாக அந்தத் தகவலை கிளிநொச்சி காவல்துறையினருக்கு உடனடியாக அறிவித்தனர். தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி காவல்துறையினர் சென்று சடலத்தை மீட்டுள்ள்னர். (10 ஆம் பக்கம் பார்க்க)



மனம் விரும்பும் விலையில் 21 அங்குல T.V

ரூபா 20, 450/- சிங்கரில் மட்டுமே. SINGER

NO.1 Stanley Road, Jaffna

Tel 021-222 5408

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்:

# நெருக்கடியான நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி

(டேர்பன்)

தென்னாபிரிக்காவுக்கு எதிராக டேர்பன் நகரில் நடக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மதிய இடைவேளை வரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 57 ஓட்டங்களை எடுத்து ஐந்து விக்கெட்டுக்களை இழந்த நிலையில், மிகவும் நெருக்கடி நிலையில் உள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது ஆட்டத்தை தொடங்கிய உடனேயே அதனது ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான வேவல்ஸ் கைன்ட்ஸ் ஓட்டமெதுவும் பெறாமல் ஷோன் பொலக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மிக விரைவிலேயே மேற்கிந்தியத்தீவுகள் அணி 17 ஓட்டங்களுக்குள் தனது நான்கு விக்கெட்டுக்களை சடுதியாக இழந்தது.

தனது நூறாவது டெஸ்டில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாரா 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

பாகிஸ்தானுடனான நியூசிலாந்து டெஸ்ட்

# சொகைப் அக்தாரின் பந்து வீச்சில் முன்னணி வீரர்கள் ஆட்டமிழந்தனர்

பாகிஸ்தானுக்கெதிராக வெலிங்டனில் நடைபெறும் இரண்டாவது டெஸ்டில் நியூசிலாந்து அணி 151 ஓட்டங்களை எடுத்து ஐந்து விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

நியூசிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க விடாமலும், அதனது முன்னணி வீரர்களின் விக்கெட்டுக்களை வீழ்த்தியும் சொகைப் அக்தார் பாகிஸ்தான் அணிக்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார். இதில் இவர் 11 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதன் பின்னர் காயமடைந்த அக்தார் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

நியூசிலாந்தின் முன்னணி வீரர்களான லூ வின்சென்ட், அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங், மார்க் றிச்சட்ஸன் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர். றிச்சட் ஜோன் 16, ஸ்கொட் ஸ்டைரிஸ் 36, மக்மிலன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

நிறைஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர். நினைவு தினத்தையொட்டி
எம்.ஜி.ஆர் (இருவேடம்), ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JOHNNY ENGLISH (சி-1846)

அவுஸ்ரேலியாவுக்கெதிரான

# 3வது டெஸ்ட் போட்டியின் முதல்நாள்

# இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 329!

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில், இந்திய அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 329 ஓட்டங்களைப் பெற்றது

அவுஸ்ரேலியாவின் மெல்பேன்ஸ நகரில் நேற்று ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் பேட்டியின் ஆரம்பத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் சௌரவ்கங்குலி தனது அணியைத துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இந்திய அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய வீரேந்தர்ஷேவாக்கும், ஆகாஷ் சோப்ராவும் அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களுக்கு பெரும் தலையிடியாக இருந்தனர்.

184 நிமிடங்கள் இணைப்பாட்டம் ஆடிய இந்த ஜோடியிலிருந்த சோப்ரா இந்திய அணி 141 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார். 48 ஓட்டங்களை, 138 பந்துகளில் எதிர்கொண்டு பெற்ற இவர் மக்கில் வீசிய பந்துக்கு கட்டிச்சிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து வீரேந்தர் ஷேவாக்குடன் ஜோடி சேர்ந்த ராகுல் ராவிட்டும் 102 நிமிடங்கள் களத்தில் நின்று பந்து வீச்சாளர்களுக்கு பெரும் சவாலாக இருந்தார். 49 ஓட்டங்களை 88 பந்துகளில் பெற்ற ராகுல் ராவிட்டும் ஸ்ரீவோ வீசிய பந்தை மாட்டினிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்துக் களமிறங்கிய இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர் முதலாவது பந்தை எதிர்கொண்ட போதே கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் கங்குலி ஜோடி சேர்ந்து ஷேவாக்குடன் ஆடிக்கொண்டிருந்த நிலையில் 311 நிமிடங்கள் நிலைத்து நின்று ஆடிய




ஷேவாக் கட்டிச்சின் பந்து வீச்சை எதிர்கொண்டு பிறக்கனிட்ம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். 234 பந்துகளை எதிர்கொண்ட ஷேவாக் 25 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 195 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே டெஸ்ட் போட்டியில் ஷேவாக் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டங்களாகும். பிறட்லி வீசிய மூன்று பந்துகள் ஷேவாக்கின் கெல்மெட்டைத் தூக்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்ட நேர முடிவில் கங்குலி 20 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் ஆறு ஓட்டங்களுடனும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

பந்து வீச்சில் மக்கில், பிரட்லீ, ஸ்டீவ்வோ, பிறக்கன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி ஒரு போட்டியில் வெற்றி பெற்று முன்னணியில்இருப்பது குறிப்பிடத்தக்கது.

லைடனின் வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

புதுவருடத்தை முன்னிட்டு 27, 28 ஆம் திகதிகளில் (இன்றும், நாளையும்) லைடன் புடவை நிலையம் திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தை 1ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P:222 2381
(பஸ் நிலையம் எதிர்)
(சி-1956)

## யாழ்ப்பாணம்-மாநகரசபை

### இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்காணப்படும் இறைச்சிக் கடைகளை 01.01.2004 ம் திகதிமுதல் 31.12.2004 ம் திகதி வரையான ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 300/= (வற் உட்பட)

கேள்விப் படிவம் வழங்கும் இறுதித் திகதி - 30.12.2003 ந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 30.12.2003 ந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணி

கேள்விகள் திறக்கும் திகதி - 30.12.2003 ந் திகதி மு.ப.11.30 மணி

| விபரம் இறைச்சிக்கடை | கடை இல. | கேள்விப் பிணைப்பணம் | சபையால் நிர்ணயித்த தொகை |
|---|---|---|---|
| 1. குருநகர் மாட்டி. கடை | .3 | 5000/- | 174330/- |
| 2. குருநகர் மாட்டி. கடை | .2 | 5000/- | 155250/- |
| 3. குருநகர் மாட்டி. கடை | .1 | 5000/- | 253800/- |
| 4. நரிக்குன்று மாட்டி. கடை | .1 | 5000/- | 274500/- |
| 5. நாவாந்துறை மாட்டி. கடை | .5 | 2500/- | 9450/- |
| 6. நாவாந்துறை மாட்டி. கடை | .1 | 2500/- | 59400/- |
| 7. நாவாந்துறை மாட்டி. கடை | .7 | 2500/- | 9630/- |
| 8. நாவாந்துறை மாட்டி. கடை | .8 | 2500/- | 5490/- |
| 9. நாவாந்துறை மாட்டி. கடை | .9 | 2500/- | 5490/- |
| 10. நாவாந்துறை கருவாட்டுக் கடை | .11 | 1000/- | 3510/- |
| 11. நாவாந்துறை கருவாட்டுக் கடை | .12 | 1000/- | 3510/- |
| 12. புங்கன்குளம் ஆட்டி. கடை | .1 | 2500/- | 36360/- |
| 13. பண்ணை ஆட்டி. கடை | .3 | 2500/- | 20400/- |
| 14. குருநகர் ஆட்டி. கடை | .7 | 2500/- | 9450/- |
| 15. கஸ்தூரியார் வீதி து. ச. வ. பா. நிலையம் | | 2500/- | 49770/- |
| 17. முஸ்லிம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | | 2500/- | 25000/- |

குத்தகையாளரே இடத்தைத் தெரிவுசெய்யவேண்டும். குறித்த இடம் மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கும் ஜின்னா வீதிக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
26.12.2003

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-1957)

## நல்லூர் பிரதேசசபை ஆதனவரி அறிவித்தல்

### 2003/நல்லூர்/கொக்குவில் உப - அலுவலகங்கள்

2003ம் ஆண்டு 4 ம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 31.12. 2003ம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள்... 15%
ஏனைய காணிகள், கட்டடங்கள் ... 20%

நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல 134(5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்

(சி-1958)

## நல்லூர் பிரதேசசபை, நல்லூர்/கொக்குவில்

### உப - அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல் - 2004

1987 ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு நடப்பு வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2004 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்த கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20%மும், விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும். எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01. 2004 ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி, வரிக் கழிவுகளைப் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு வரி இறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதேசசபை,
நல்லூர்.
24.12.2003.

(சி-1959)

### சமாதான முயற்சிகள் குறித்து

# தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துக்கு இராஜதந்திர வட்டாரங்கள் வரவேற்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தென்பகுதி மக்களின் ஆணையைப்பெறும் எந்தவொரு அரசியல் தலைவருடனும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக சு.ப.தமிழ்செல்வன் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளை இலங்கை அரச தரப்பில் முன்னெடுத்துச் செல்லும் தரப்பிடம், பாதுகாப்பு அமைச்சு அதிகாரங்கள் இருக்கவேண்டுமெனவும், சு.ப.தமிழ்செல்வன் வலியுறுத்தியிருந்தார்.

சு.ப.தமிழ்செல்வனின் இந்தக் கருத்துக்கள் இலங்கையின் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு இருக்கின்ற கரிசனையையே வெளிப்படுத்துவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலான அதிகாரப் போட்டிக்கு இதுவரை முடிவுகாணாதநிலையில், விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீதானகரிசனை தொடர்ச்சியாக வெளியிட்டுவருவது குறித்தும் இராஜதந்திர வட்டாரங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியால், வடக்கு-கிழக்குக்கான அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியுதவிகளையும் வழங்கமுடியாதிருப்பது குறித்தும்,

அரச தரப்பால் முழுமையான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படாதநிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர, அன்ரன் பால சிங்கத்தின் வன்னி விஜயமும் தாமத மாகலாம் என, இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# முஸ்லிம் காங்கிரஸின் திட்டவரைபு இந்தமாத இறுதியில் புலிகளிடம்?

### ஹக்கீம் கூறியதாக தகவல்

முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால திட்டவரைபு - இந்தமாத இறுதிக்குள் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் நிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் திட்டவரைபில், வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் - பாதுகாப்புத் தொடர்பாக, அவர்களின் அபிலாசைகளும் உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (01)

### ஆங்கில தகுதிகாண் பரீட்சை

பஸ்துன்ரட்ட, மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரிகளில், ஆங்கிலப் பாடநெறியினைப் பயில்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான, தகுதிகாண் பரீட்சை - ஜனவரி மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இந்தப் பரீட்சை- கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டுமே நடைபெறவுள்ளது. அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு விரைவில் நேர்முகப்பரீட்சை நடைபெறுமென, மாகாண நேர்முகப் பரீட்சைக் குழு இணைப்பாளரும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுமான கலாநிதி. தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

# சைப்பிரஸ் செல்லும் மாணவர்கள்; விசா அனுமதியில் கட்டுப்பாடுகள்!

### லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன

(கொழும்பு)

சைப்பிரஸ் நாட்டிற்கு மாணவர் கல்வி விசா அனுமதியில் செல்வோர் அங்கு சட்டரீதியற்ற தொழில்களில் ஈடுபடுவதன் காரணமாக - இந்த அனுமதியில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வெளிநாட்டு பணியாளர் நலன் காக்கும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

எனவே, இனிவரும் காலங்களில் இந்த மாணவர்களின் விசாக்கள்- சைப்பிரஸ் நாட்டின் நிக்மோசியா என்ற இடத்தில் அமைந்துள்ள சைப்பிரஸ் பல்கலைக்கழகத்துக்கு மாத்திரமே வழங்கப்படுமெனவும், ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு விசா அனுமதியைப்பெற, மாணவர்களால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டால், அவை போலியானவையாகக் கருதப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# சோமதேரரின் மரணம் இயற்கையல்ல; மெத்தானந்ததேரர் குற்றச்சாட்டு

அண்மையில் காலமான கங்கொடவில சோமதேரர் - இயற்கை மரணம் எய்தவில்லை எனவும், அவர் உயிரிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும், மூத்த பௌத்த மத குருவான சங்கைக் குரிய எல்லாவெல மெத்தானந்ததேரர் தெரிவித்தார்.

கங்கொடவில சோமதேரரின் இறுதிக்கிரியைகள் கடந்த புதன்கிழமை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றபோது, அங்கு உரையாற்றிய சங்கைக்குரிய எல்லாவில மெத்தானந்ததேரர் இவ்வாறு தனது கருத்தைக்கூறியுள்ளார்.

கங்கொடவில சோமதேரர் இலங்கையில் கிறிஸ்தவ மதப் பரம்பலுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்தவர் எனவும், அதன் காரணமாகவே யாரோ திட்டமிட்டு இந்தக் கொலையைப் புரிந்திருப்பதாகவும்,

பௌத்த நாடான இலங்கையில் பௌத்த மதமும், சிங்கள மக்களுடைய உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமெனக் குறிபபிட்ட எல்லாவெல மெத்தானநத தேரர், இனரீதியாகச் செயற்படும் அடிப்படைவாத கிறிஸ்தவ சமயத் துரோகிகள் குறித்து ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் இருந்து வந்தால், நாடு சமய யுத்தமொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்றும் எச்சரித்துள்ளார்.

### புல்லுமலை புலிகளின் சுடுநிலை

# அமைந்துள்ள பிரதேசம் குறித்து தெளிவான தகவல்கள் இல்லை

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

மட்டக்களப்பு - புல்லுமலைப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சுடுநிலை யாருடைய கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ளதென்பது, தெளிவில்லாமல் இருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அரச, மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லைப் பகுதிகள் குறித்த, தெளிவற்ற நிலை காணப்படுவதனாலேயே இந்தச் சிக்கல் தோன்றியிருப்பதாக கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

புல்லுமலைப் பகுதியில் - விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கேட்டபோதே, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புல்லுமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைத்திருப்பதாகத் தமக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, உள்ளூர் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நேரடியாக அப்பகுதிக்குச் சென்று நிலைமையை அவதானித்ததாகக்கூறிய, ஹக்ரப் ஹொக்லண்ட் - அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் சுடுநிலையொன்றை அமைத்திருக்கின்றனரே தவிர, அது பதுங்குழியல்ல எனவும்,

இதுகுறித்து, மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் தலைமைப் பீடத்துக்கு அறிக்கையொன்றை அனுப்பியிருப்பதாகவும், தலைமைப்பீடமே இனி இந்த விடயத்தில் முடிவெடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார.

### கங்கொடவில சோமதேரரின்

# இறுதிக் கிரியையில் துண்டுப்பிரசுரம்; இருவர் மீது விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு)

மறைந்த சங்கைக்குரிய கங்கொடவில சோமதேரரின் இறுதிக் கிரியைகள் - சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றபோது, சர்ச்சைக்குரிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைதாகி இருக்கும் சந்தேக நபர்களிடம் இருந்து சரியான அல்லது தேவையான தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்குமாறு குழு ஒன்று அதிக அழுத்தம் கொடுத்துள்ளது. இதனால், இறுதிக் கிரியைகள் இடம்பெற்றபோது, பொலிஸார் கண்ணீர் புகைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

ஆயினும், பொலிஸார் கண்ணர்ப் புகைத் தாக்குதல்களை ஏன் மேற்கொண்டார்கள் என்பன குறித்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். இந்தக் குழப்பநிலையின்போது, நான்குபேர் காயமடைந்திருந்தனர்.

# ரயில்வே கட்டணங்கள் 60 சதவீதத்தால் உயர்வு!

(கொழும்பு)

ரயில்வே கட்டணங்களை 60 சதவீதத்தால் உயர்த்துவதற்கு, ரயில்வே அதிகாரசபை தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானம், நாளை முதல் அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்தபோதிலும், எந்த அடிப்படையில் உயர்த்தப்பட இருக்கின்றது என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், ரயில்வே அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்தகாலத்தில் ரயில்வே சேவைகளால், 200 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாகவே சேவைக் கட்டணம் உயர்த்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்பு

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டத்தாபனத்தின் தலைமை ஊழியர்களும், பிராந்திய ஊழியர்களும் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்துத் தெரியவருவதாவது, 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பள நிலுவையை உடனடியாக வழங்கவேண்டும், தமது தொழிற்சாலைக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும், ஏனைய கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் - தமக்கும் வழங்கப்படவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் காரணமாக நாடளாவியரீதியில் எரிபொருள் விநியோகம் ஸ்தம்பித்துக் காணப்பட்டது. சில பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை நிலையங்களில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படாத காரணத்தால், எரிபொருள் முடிவடைந்தநிலையில் காணப்பட்டன.

இந்தப் போராட்டம் கொழும்பு உட்பட, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மறியற்போராட்டமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (01)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரின் வீட்டின்மீது கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டின்மீது - நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த குண்டுவீச்சு காரணமாக, ஆதரவாளரின் வீட்டிற்குப் பலத்த சேதம் ஏற்பட்டது எனவும், அவரின் வீட்டிலுள்ள வாகனம் பலத்த சேதத்திற்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பகின்றது.

இந்த சம்பவத்தில் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. எவருக்கும் காயமேற்படவில்லை.

இந்தச் சம்பவம் பற்றிய விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# புதிய பொலிஸ்மா அதிபரை கடற்படைத் தளபதி சந்திப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றுக்கொண்ட புதிய பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா - நேற்று முன்தினம் கடற்படைத் தளபதி தயா சந்தகிரியைச் சந்தித்துள்ளார்.

கடற்படைத் தளபதியுடனான இந்தச் சந்திப்பு உத்தியோகபூர்வமான ஒன்றல்ல எனவும், இது சம்பிரதாயபூர்வமான ஒரு சந்திப்பே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், சாதாரண முறையில் பொலிஸ்மா அதிபரும் கடற்படைத் தளபதியும் பேச்சு நடத்தினர்.

பொலிஸாரும், கடற்படையும் இணைந்து செயற்படுவது தொடர்பாகவும், பொலிஸுக்கும் கடற்படைக்கும் இடையிலான உறவு குறித்தும் இவர்கள் பேசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

### ஒளிவிழா நிகழ்வு

ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஐக்கிய சனசமூக கலையரங்கில் இன்று மாலை 5 மணியளவில், ஒளிவிழா கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - நடிகர் கலாமணி நவஜீவாவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட பல நாடகங்களும், சிறுவர்களின் நடனம் மற்றும் மறைக்கல்விப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

# 6 படகுகளுடன் இந்திய மீனவர்கள் இராமேஸ்வரத்திற்குத் திரும்பினர்!

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 8 படகுகளை மீட்க, இலங்கை வந்த இராமேஸ்வர மீனவர்கள் குழு 6 படகுகளுடன் திரும்பிச் சென்றுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு இராமேஸ்வரம் மீனவர்கள் சிலரை இலங்கை கடற்படை பிடித்துச் சென்றது. பின்னர் மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டனர். அவர்களது இயந்திரப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

பறிமுதல் செய்யப்பட்டிருந்த படகுகளை மீட்டுச் செல்வதற்காகக் கடந்த 22 ஆம் திகதி 43 பேர் கொண்ட மீனவர் குழு இலங்கைக்கு வந்தது. பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் இந்த மீனவர்களிடம் 8 படகுகளும் கொடுக்கப்பட்டன. அதில் 2 படகுகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்திருந்தன. இதையடுத்து 6 படகுகளுடன் மீனவர்கள் இராமேஸவரம் திரும்பினர்.

# வெளியிடங்களுக்கு மாணவர்கள் செல்வதால் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்

## மருத்துவப் போராளிகள் எச்சரிக்கை

பெற்றோருக்குத் தெரியாமல் தற்பொழுது பாடசாலை மாணவர்கள் கொழும்புபோன்ற வெளியிடங்களுக்குச் சென்றுவருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாகப் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனத் தமிழீழ சுகாதாரசேவையைச் சேர்ந்த மருத்துவப் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது நடைபெற்றுவரும் எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகளில் நேற்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கிராமசேவையாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு நிகழ்வில், கருத்துக்களை வழங்கும்போதே, அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

தற்பொழுது போக்குவரத்து மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள் குழுவாகவோ அல்லது தனியாகவோ கொழும்பு போன்ற தென்னிலங்கை பகுதிகளுக்குச் சென்று, தவறான வழியிலே செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சென்ற பாடசாலை மாணவனொருவனை- நாம் சந்தேகத்தின் பெயரில் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து விசாரித்தபோது, அவர் பெற்றோருக்குத் தெரியாமலே கொழும்பு சென்ற விடயம் தெளிவாகியுள்ளது. பின் நாம் பெற்றோரை வரவழைத்து அவரைப் பெற்றோரிடம் ஒப்படைத்தோம்.

இவ்வாறு செல்லும் மாணவர்கள் அங்கு தவறான பல நடத்தைகளிலே ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய உள்ளன. இதன்மூலமாக எயிட்ஸ் போன்ற கொடியநோய்களுக்கும் அவர்கள் இரையாகக் கூடும். இது அவர்களது வாழ்வை இருண்டதாக்கிவிடும்.

எனவே, பெற்றோர்கள் - தமது பிள்ளைகளுடைய விடயத்திலே மிகவும் கவனமாகவும், அவதானத்துடனும் நடந்துகொள்ளவேண்டும். இரவு வேளைகளில் நண்பர்களுடன் தங்கிப் படிப்பதாகக் கூறிவிட்டு, சில மாணவர்கள் தவறான நடத்தைகளிலே ஈடுபடுகின்றார்கள். இது தொடர்பான முறைப்பாடுகள் பலவும் எமது அரசியற்துறை அலுவலகங்களுக்குக் கிடைத்துள்ளது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நேற்றையதினம் யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறையினரின் ஏற்பாட்டில், யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், நாவலர் கலாசார மண்டபம், யாழ். மாவட்ட செயலகம் ஆகிய இடங்களிலே எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

வீடுவீடாகச் சென்றும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளையுடன் முடிவடையும் எயிட்ஸ் விழிப்புணர்வு வார பிரசாரங்கள்- நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் மிகவும் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# இந்து வாலிபர் சங்கத்தால் பிரதான கட்டடங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் பிரதான கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படுகிறது. கடந்த காலங்களில் சேதங்களுக்கு உட்பட்டுக் காணப்பட்ட இந்தக் கட்டடங்கள், தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றது. நூற்றாண்டு விழாவை எதிர்கொள்ளவுள்ள இந்தச் சங்கமானது, இக்காலப்பகுதியில் பல திறமையான விளையாட்டுக் குழுக்களைத் தன்னகத்தே கொண்டது. சங்க நிர்வாகத்தினரின் பெரும் முயற்சியாலும், தலைவர் க.சிவராசாவின் தனிப்பட்ட முயற்சியினாலும் புனரமைப்புத் தொடர்பான நிதி திரட்டப்பட்டு, புனரமைப்பு வேலைகள் முடிவடையும்நிலையில் உள்ளன.

# மின்சாரசபையின் நடவடிக்கையால் புதிய வாடிக்கையாளர்கள் அலைச்சல்

தற்போது ஏற்பட்டுள்ள மின்சார பாவனையின் அதிகரிப்பினால், அதற்கேற்றவாறு மின்சாரசபையினர் தமது வாடிக்கையாளருக்குச் சேவை வழங்குவதில்லை என வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது புதிய மின்சாரபாவனையாளர்கள் அதிகரிப்பால் அவர்களுக்கு மின்சார தூண்கள் புதிதாக வழங்க நெருக்கடி நிலவுவதாகவும், ஒப்பந்த அடிப்படையிலேயே இவ்வாறான பணிகள் இடம்பெறுவதால் மக்களுக்குத் துரிதகதியில் சேவையை வழங்க முடிவதில்லை என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. பிறவுண் வீதி, குளப்பிட்டி பணிமனையில் பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் - மக்கள் சந்திப்புக்கென காத்திருப்பதும், புதிய இணைப்புப்பெற அலைவதும வாடிக்கையாகவுள்ளது.

மின்சார தூண்கள் போடப்பட்டாலும், மின் இணைப்பு வழங்க பல மாதங்கள் செல்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (205)

# வெளிவாரி மருந்தாளர் பயிற்சிநெறி நாளையதினம் ஆரம்பமாகவுள்ளது

தனியார் மருந்தகங்களில் தற்போது நிலவும் மருந்தாளர் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படவுள்ள வெளிவாரி மருந்தாளர் பயிற்சிநெறி, நாளை காலை 9.30 மணிக்குச் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.குமாரவேற்பிள்ளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து பயிலுநர்களுக்கும் அனுமதிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனைத்து பயிற்சியாளர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்.

# பொலித்தீன் கொழுத்தி விளையாடிய சிறுவனின் கண்ணொன்று பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

பொலித்தீன் பையைக் கொழுத்தி விளையாடியபோது, அது கண்ணில் பட்டதால் சிறுவனின் கண்ணொன்று பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம மாலை இடைக்குறிச்சி- வரணியில் இடம்பெற்றது. செல்வராசா சியாந்தன் (வயது 6) என்ற சிறுவனே கண்ணொன்று பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வீட்டில் கிடந்த பொலித்தீன் பை ஒன்றைக் கொழுத்தி விளையாடிய வேளை, சிறுவனின் தாயார் அதனைக் கொழுத்தி விளையாடவேண்டாம் என எச்சரித்துள்ளார்.

அதனைப் பொருட்படுத்தாத சிறுவன் - இரகசியமானமுறையில் அதனைக் கொழுத்தி விளையாடியுள்ளான். எனினும், தாயார் அதனைக் கண்டதும் கொழுத்திய பொலித்தீன் பையை எறிய முற்பட்டபோது, உருகியநிலையில் எரிந்துகொண்டிருந்த பொலித்தீன் சிறவனின் கண்ணிற்பட்டதில், ஒருபக்க கண்ணின் பார்வை பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் சிறுவனின் பார்வையை சீர்செய்வதற்கு முயற்சிப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

## வீரமணிஐயரின் திருவுருவப்படம் திரைநீக்கம்

பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயரின் இரங்கல் கூட்டமும், திருவுருவப்படத் திரைநீக்கமும் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை தலைவர் மு.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், அஞ்சலி உரைகள், கிருஸாந்தி ரவீந்திரா தயாரித்து வழங்கும் நடன அரங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

# கண்ணாடிக் கதவுடன் மோதிய சிறுவன் முகத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பூட்டியிருந்த கண்ணாடிக் கதவுடன் வேகமாக மோதுண்டதில், சிறுவனொருவன் முகத்திலும், கைகளிலும் படுகாயமடைந்தான். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை யாழ். நகரிலுள்ள உணவகம் ஒன்றிலே இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த செல்வகுமார் தனராஜ் (வயது 15) எனும் சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

உறவினர்களுடன் உணவகத்திற்குள் சென்ற சிறுவன், வெளியில் நின்ற ஒருவரை உள்ளே கூட்டி வருவதற்காகச் சென்றபோதே, பூட்டிய நிலையிலிருந்த கண்ணாடிக் கதவுடன் மோதுண்டுள்ளார். இதனால், கண்ணாடிக் கதவு உடைந்ததில் சிறுவன் முகத்தில் படுகாயமடைந்தார்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட சிறுவனின் முகத்தில்- பன்னிரண்டு தையல்கள் போடப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு, ஒளி நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட நிகழ்வில் - நிறுவனத் தலைவர் ஆர்.ஸ்ரெனிஸ்லாஸ் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் மலேரியா அழிப்பு திட்ட நடவடிக்கையின் முகமாக, கடந்த 13 ஆம் திகதி தமிழ் கந்தையா வித்தியாசாலையில் பொதுமக்களுக்கு 1000/- பெறுமதியான நுளம்பு வலை கொடுக்கப்பட்டது. முன்னாள் ஆளுநர் உபாலி சமரசிங்க, சுன்னாகம் லயன்ஸ் தலைவர் திருநாவுக்கரசு, சுன்னாகம் லயன்ஸ் செயலாளர் மகாதேவா பொதுமகன் ஒருவருக்கு நுளம்பு வலையை வழங்குவதைக் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## உலவிக்குளம் பிள்ளையார் கோயில் மகா யாகம்

பெருங்கதை பூர்த்தி நாளான இன்று காலை 10 மணிக்கு, அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயிலில் மகா யாகம் நடைபெற உள்ளது. பிரம்ம ஸ்ரீ கு.வை.வித்த கிரிஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வானது, நாட்டின் சமாதானம் நிலைத்திடவும், விளைபொருட்கள் பெருகிட நல்ல மழை வேண்டியும், நாட்டின் நலனிற்கான பிராத்தனை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (128)

## கலங்கரைவிளக்கம் வெளியீட்டு விழா நடைபெற்றது

புவியியல் ஆசிரியர் கு. கிரிதரனின் "கலங்கரை" தேசப்படவழிகாட்டி நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.நித்தியானந்தனும், கௌரவ விருந்தினராக அருட் சகோதரி மரியறோசலியோவும், கலந்துகொண்டனர். (128)

## சமுர்த்தி வங்கிக்கு முகாமையாளர் நியமனம்

(மட்டுவில்)

கைதடியில் இயங்கும் சமுர்த்தி வங்கியின் புதிய முகாமையாளராக திருமதி கௌரி குணரட்ணம் கடந்த 19 ஆம் திகதி முதல் பதவியேற்றுள்ளார்.

இவர் இதுவரைகாலமும் யாழ். மாவட்ட செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இந்த வங்கியின் முன்னாள் முகாமையாளர் எஸ்.பாலகரன் - சாவகச்சேரி சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக இடமாற்றம் பெற்றுள்ளார்.(24)

## வருடாந்த ஒன்றுகூடலும் பிரியாவிடையும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகத்தர் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், வேலை மாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிற்கான பிரியாவிடை வைபவமும் இன்று காலை 10 மணிக்குச் செயலக மாநாட்டு மண்டபத்தில், நலன்புரிச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (44)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.லதுசன்
முகவரி : சிவ மகால், நவாலி.

பத்தாவது அகவையில்



பெயர் : ஜெ.கீர்த்தனா
முகவரி : துர்க்கா பொடிவேக்ஸ், இமையாணன்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------
-------------------------
முகவரி :-------------
-------------------------
பிறந்த ஆண்டு:-------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------
பெற்றோர் ஒப்பம்

## புத்திக்கூர்மை என்பது...?



முன்னொரு காலத்தில் பேரரசன் ஒருவன் குறுநில மன்னன் ஒருவனது நாட்டிற்கு வருகை தந்தான். பேரரசனுக்கு அந்நாட்டில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாட்டு அரசர்களும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பேரரசன் குறுநில மன்னனைப் பார்த்து - 'உமது நாட்டு அமைச்சன் அறிவுக்கூர்மையில் சிறந்தவன் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?' என்று கேட்டான். 'உண்மைதான் அரசே' என்று பதில்சொன்னான் குறுநில மன்னன்.

"அப்படியானால், அந்த அமைச்சனை அழைத்து நம் இருவருக்கும் குடிப்பதற்குப் பால் கொண்டுவரச் சொல்லுங்கள். அவன் உண்மையில் அறிவுள்ளவன்தானா என்பதை நான் கண்டுபிடித்து விடுகிறேன்'' என்றான் பேரரசன்.

உடனே அமைச்சனை அழைத்து குறுநில மன்னன். "நாங்கள் இருவரும் குடிப்பதற்குப் பால் கொண்டு வா'' என்றான்.

அமைச்சனும் - அழகான ஒரு தட்டில் இரண்டு கிண்ணங்களில் பால் வைத்து, அங்கே கொண்டுவந்தான்.

அப்போதுதான் அவனுக்கு யாரிடம் முதலில் தட்டை நீட்டுவது என்ற குழப்பம் ஏற்பட்டது.

'நம் அரசனிடம் முதலில் கொடுத்தால், பேரரசன் தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கோபம் கொண்டு என்னைக்கொன்று விடுவான். மாறாகப் பேரரசனிடம் முதலில் கொடுத்தால், எனது அரசன் - எனது தலையை எடுத்து விடுவான்'. என்ன செய்வது? என்று சிந்தித்தபடி தயங்கிநின்றான்.

குறுநில மன்னனுக்கு அப்பொழுது அமைச்சரின் சிக்கல் நன்கு புரிந்து. அவன் என்னதான் செய்கிறான் பார்ப்போம் என்ற எண்ணத்தில் அமைதியாக இருந்துவிட்டான்.

ஆனால், அறிவுள்ள அந்த அமைச்சனோ, தட்டைத் தன் அரசனிடம் நீட்டி, "அரசே தன் விருந்தினரான பேரரசருக்கு என் கையால் பால் தருவது தகுதி ஆகாது. அதைத் தாங்களும் விரும்பமாட்டீர்கள். தங்கள் திருக்கரங்களாலேயே பாலைப் பேரரசருக்குக் கொடுத்து, விருந்தினரைப் பெருமைப்படுத்துங்கள்" என்றான்.

தன்னையும், விருந்தினரையும் ஒரேசமயத்தில் பெருமைப் படுத்திய அமைச்சரின் அறிவுக்கூர்மையை வியந்த அரசன் - அவனுக்குப் பல பரிசுகளைக் கொடுத்துச் சிறப்பித்தான்.

எனவே, அறிவு என்பது அனைவருக்கும் இருப்பது. அதனைச் சந்தர்ப்பத்துக்கேற்ப மாற்றியமைத்து, தவறுகளைத் தவிர்ப்பது தான் கூர்மையான, சாதுரியமான அறிவு. குறுநில நாட்டு அமைச்சன்போல், சந்தர்ப்பத்தை அறிந்து, சாதுரியமாகச் செயற்படாமல் போகும் சில சந்தர்ப்பங்களில் - பல வகையானவற்றை தாம் இழக்கநேரிடுவதுடன், இக்கட்டான பல சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடுவதும் உண்டு.

எனவே, சந்தர்ப்பத்திற்கேற்ப புத்தியைச் சீண்டிவிடுங்கள். அது கூர்மையானதா என்பதை சீண்டிப்பார்ப்பதன்மூலம் அறிந்தும் கொள்ளலாம்.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

ஒரு குடும்பத்திலுள்ள பெண்கள் ஒவ்வொருவருக்கும் சம எண்ணிக்கையிலான சகோதரிகளும், சகோதரர்களும் உள்ளனர். ஆனால், ஒவ்வொரு ஆணுக்கும் சகோதரர்களைப்போல் இருமடங்கு சகோதரிகள் உள்ளனர் எனில், எத்தனை பெண்கள்? எத்தனை ஆண்கள்? கண்டுபிடியுங்கள்.

விடை அடுத்தவாரம்

## உங்களுக்குத் தெரியுமா?

⌘ முதலுமுதலாகத் தபால் தலை (தபால் முத்திரை) சேகரிக்கும் பழக்கம் 1841 ஆம் ஏற்பட்டது. லண்டனைச் சேர்ந்த ஒரு பெண்மணி 1841 ஆம் ஆண்டு 'மைஸ்' என்ற நாளிதழில் விளம்பரம் கொடுத்து, தபால் தலைகளைச் சேகரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். தபால் தலைகளை உலகில் அதிகம் சேர்த்தவர் - இரண்டாம் எலிசபெத். அதனைத் தொடர்ந்துதான் இப்போது நீங்கள் எல்லோரும் முத்திரை சேகரிக்கின்றீர்கள்.

⌘ நமக்குத் தலையின் இருபுறமும் காதுகள் இருக்கின்றன. பறவைகளுக்கும் காதுகள் சிறு இறகுகளினால் மறைந்து இருக்கும். சில பூச்சிகளுக்கு முன்னங்கால்களிலேயே சத்தத்தை உணரும் சக்தி இருக்கிறது. பாம்பிற்குக் காது இல்லை. அது தரையில் ஏற்படும் அதிர்வுகளைக்கொண்டே மற்றவர்கள் வருவதைத் தெரிந்து கொள்ளும்.

## விடுகதைகளும் விடைகளும்



1. மரத்திலே காய்க்காத பழம் அது என்ன?
2. சின்ன மச்சான் குனிய வைச்சான் அவன் யார்?
3. கல்யாண வீட்டுக்கு வந்தவர் முற்றத்தில் நிற்கிறார். அவர் யார்?
4. நான் சிரித்தால், அவன் சிரிப்பான். நான் அழுதால், அவனும் அழுவான். அவன் யார்?
5. ஒரு வீட்டுக்கு நாலு முற்றம். அது என்ன?
6. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல். அது என்ன?

### விடைகள்

| | | |
|---|---|---|
| 1. ஐஸ்கிறீம் | 2. முள் | 3. செருப்பு |
| 4. கண்ணாடி | 5. கைவிரல்கள் | 6. கிளி |

சி. அசோக்கமாலா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## சென்றவார விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 20 | 25 | 18 | 63 |
| 19 | 21 | 23 | 63 |
| 24 | 17 | 22 | 63 |
| 63 | 63 | 63 | |





# சிறுவர் அரங்கம்

அன்புச் சிறுவர்களே!

உங்கள் அனைவருக்கும் எமது பத்திரிகை நிர்வாகம் சார்பாக மகிழ்ச்சியுடன் சிறுவர் அரங்கத்தை இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். சிறுவர்களே! நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் பாவும் எமக்கு கிடைக்க வந்து கிடைக்கின்றன. அவை எப்போது பிரசுரமாகும் என நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆக்கங்கள் வந்த ஒழுங்கிலேயே பிரசுரிக்கப்படும். தொடர்ந்தும் எழுதுங்கள். நீங்கள் பத்திரிகையில் வெளிவந்த அம்சங்கள், உங்களைக் கவர்ந்த விடயங்கள், குட்டிக் கதைகள் என்பவற்றை எழுதுங்கள். இது சிறுவர்களாகிய உங்கள் பக்கம்.

உங்கள் ஆக்கங்களை வெளிக்கொண்டுவர இது களம். அவற்றைப் பிரசுரிக்க நாம் காத்திருக்கிறோம்.

அத்தோடு, தெளிவான கையெழுத்தில் உங்கள் ஆக்கங்களையும், அங்கத்தவர் படிவங்களையும் எழுதி அனுப்புங்கள். அப்போதுதான்-தெளிவாக விளங்கிக்கொள்ளமுடியும்.

பாசமுடன் - சாரு அக்கா

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### கிறின்லாந்து

தலைநகர் - நூக்
மொழி - எஸ்கிமோ, டயலெக்ட், டானிஷ், கிறின்லாண்டிக்.
சமயம் - இவான் ஜெலிக்ஸ், லுத்தேறன், சமானிசம்
நாணயம் - டானிஷ், கொரோனி
வாழும் மக்கள்: கிறின்லாந்தர், டானிஷ்
மக்கள் தொகை: 5,60,000




உலகில் மிகவும் குளிர்ந்த பிரதேசங்களில் கிறின்லாந்தும் ஒன்றாகும். இந்த நாடு பனிக்கட்டியினால் அமைக்கப்படும் இக்லூஸ் (IGLOOS) எனப்படும், வீடுகளுக்கும், துருவக்கரடி, நீர்நாய் ஆகிய மிருகங்களுக்கும் புகழ்பெற்றது. இந்த நாட்டின் அதிகமான பிரதேசங்கள் பனிக்கட்டியினால் மூடப்பட்டுள்ளது. அதனை உலகின் மிகப்பெரும் தீவாகவும் இந்த கிறின்லாந்து காணப்படுகின்றது. அதிக குளிர் காரணமாக இந்த நாட்டில் மக்கள் அதிகம் வாழ்வதற்கு விரும்புவதில்லை.

கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கு முன்பு - இங்கு இருவகையினர் வாழ்ந்து வந்துள்ளனர். பின்னர் சாக்குக் (SAQQAQ) என்ற இனம் இங்கு வசித்து வந்தது. ஆனால், இந்த இனமக்களை இருப்பையின் சிறப்பித்திருக்கு எதிராகத் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளமுடியவில்லை. இவர்களின் பின்னர் துலி (THULE) என்ற இனம் வாழ்ந்தது. இவர்கள் நீர்நாய்களின் தோலில் இருந்து தயாரித்த சிறுகலங்களையும், நாய்களின் உதவியுடன் இழுத்துச் செல்லும் - பனிக்கட்டி மீது செல்லக்கூடிய வாகனங்களையும் பாவித்தார்கள். வேட்டையாடுவதைத் தங்களின் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பின் நாட்களில் இந்நாட்டின் மீது மேற்கு நாட்டவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. இவர்களின் கடற்பயணம் - இதன் அருகில் அமைந்துள்ள கடல்கள் - திமிங்கில வேட்டைக்கு உகந்ததாகக் காணப்பட்டமையேயாகும்.

முக்கிய தொழில்கள்:
மீன் பதப்படுத்துதல்.
மிருகங்களின் மயிருடன் கூடிய தோலில் ஆடைகள் தயாரித்தல்.
உல்லாசப் பிரயாணங்கள்.

## இலங்கை பற்றிய தகவல்கள்


1. இலங்கையில் பெரிய மாவட்டம் - அனுராதபுரம்
2. இலங்கையின் மிக உயர்ந்த நீர் வீழ்ச்சி - பம்பரகந்த
3. இலங்கைக்கு சோழர்கள் இட்ட பெயர் - மும்முடிச் சோழமண்டலம்
4. இலங்கை நாடாளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை - 225
5. நல்லூரில் இருக்கும் அழியாவரலாற்றுச் சின்னம் - சங்கிலியன்தோப்பு
6. உலகப் பிரசித்தி பெற்ற இலங்கை ஓவியர் - ஜோர்ஜ்கீற்
7. இலங்கைப் பிரதமர் வசிக்கும் இடம் - அலரி மாளிகை
8. இலங்கையின் முதல் பெண் பிரதமர் - சிறிமாவோ பண்டாரநாயக்க
9. இலங்கையின் உயரமான அணைக்கட்டு - விக்ரோறியா
10. இலங்கையின் மூன்று இனத்தவர்களாலும் புனிதமாகக் கருதப்படும் இடம் - சிவனொளிபாதமலை

வி. சாரு
தரம் - 9
நெடுந்தீவு, சைவப்பிரகாச வித்தியாலயம்.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ப. அபிராம்
கற்கும் பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- ச. புஸ்பராஜ்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கால்பந்து, கவிதை எழுதுதல்,
வானொலி கேட்டல், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- க. சுகீதர்
கற்கும் பாடசாலை :-
யாழ். இந்துக் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
வரைதல், எழுதுதல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- ம. கரிபரன்
கற்கும் பாடசாலை :-
மகாஜனாக் கல்லூரி
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், விளையாட்டு.

முழுப்பெயர் :- சி. மயூரதி
கற்கும் பாடசாலை :-
அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- கு. தீபிகா
கற்கும் பாடசாலை :-
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கல்வி.

முழுப்பெயர் :- சி. ரஜீவன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்,
மீன் வளர்த்தல்.

முழுப்பெயர் :- கு. யுகந்தன்
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
பொது அறிவு, வாசித்தல்,
ஆங்கில கட்டுரை எழுதுதல்.

முழுப்பெயர் :- ச. மஞ்சுகி
கற்கும் பாடசாலை :-
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கதைப்புத்தகம் வாசித்தல்,
விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................

கற்கும் பாடசாலை :.................................

கற்கும் தரம் :.................................

வீட்டு முகவரி :.................................

பிறந்த திகதி :.................................

ஆர்வமுள்ள துறைகள் :.................................

.................................

................. திகதி ................. ஒப்பம்

................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ................. பெற்றோர் ஒப்பம்




## My Self

I am a girl.
I am in grade 7.
My name is Manjuki.
My father's name is Satgunam.
My mother's name is Mala.
My father is a Welder.
I have no sisters and only one brother.
My mother is a House wife.
I study at Chundikuli girls college.
My English teacher's name is Mrs.T.Jeyasealan.
My class teacher's name is Mrs. T.Vimalan

S.Manjuki
Chundikuli girls college.

## உங்கள் கைவண்ணம்



ப. கபிலன்
தரம் - 8
மத்திய கல்லூரி.





ச. மஞ்சுகி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| கொம்பியூட்டர் | - ஹோவர்ட் அட்சன் |
| விமானம் | - ஆர்வில் ரைட், வில்பர் ரைட் சகோதரர்கள் |
| ரேடியோ | - மார்க்கோனி |
| சினிமா | - ஜெருமியர், எலுமியர் |
| இன்சுலின் | - ஸர் பிரட்ரிக் பேண்டில் |
| கடிகாரம் | - A.L.ப்ரிகெட் |
| மின்காந்தம் | - J.N.நிப்ஸி |
| பரசூட் | - A.J. கொர்னரின் |
| தையல் இயந்திரம் | - I.M - சிங்கர், B.தம்மொன்னியர் |
| மின்தறி | - எட்மன்ட் கார்ட்ரைட் |
| பியானோ | - கிறிஸ்டோப்ரி |

த.நிசாந்
தரம் - 9
சென்.ஜோன்ஸ் கல்லூரி.


## உங்கள் 'நண்பன்' இங்கே ஆங்கில எழுத்துக்களாக மறைந்திருக்கிறான். கண்டுபிடியுங்கள்



## சந்தேகம் – விளக்கம்

**எருமை மாடுகள் வெயில் ஏறியதும் ஏன் நீர் நிறைந்த குட்டைகளை நோக்கி செல்கின்றன.**

கறுப்பான பொருட்கள் வெப்பத்தினை எளிதில் உறிஞ்சிக் கொள்ளும் தன்மை வாய்ந்தவை.



எருமை மாட்டின் தோலின் நிறமும் கறுப்பு. கோடையில் ஏராளமான வெப்பத்தினை எருமைமாடுகளின் தோல் உறிஞ்சிக்கொள்கிறது. எருமை மாடு குட்டையிலிருக்கும்போது, இந்த வெப்பம் முழுவதையும் தண்ணீர் ஏற்றுக்கொள்கின்றது.

அப்போது எருமை குளிர்ச்சியை உணர்கிறது. இதனால் தான், எருமை மாடுகள் பகல் நேரங்களில் நீண்டநேரம் நீர் நிறைந்த குட்டையில் இருக்கிறது.

## பொன்மொழிகள்

| | |
|---|---|
| வருவதும் போவதும் | - இன்பமும், துன்பமும் |
| வந்தால் போகாதது | - புகழ், பழி |
| போனால் வராதது | - இளமை , முதுமை |
| நம்முடன் வருவது | - பாவம், புண்ணியம். |
| அடக்கமுடியாதது | - ஆசை, துக்கம் |
| தவிர்க்கமுடியாதது | - பசி, தாகம். |
| நம்மால் பிரிக்கமுடியாதது | - பந்தம், பாசம். |
| அழிவைத் தருவது | - பொறாமை, கோபம். |
| எல்லோருக்கும் பொதுவானது | - இறப்பு, பிறப்பு. |

தி. சாரங்கன்.

இங்கே மடிக்கவும்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# 'எய்ட்ஸ்'; தேவை விழிப்புணர்வு

இன்று உலகை பெருமளவில் அச்சுறுத்திவரும் இரு ஆபத்தான விடயங்களில் மிகவும் முக்கியமானது 'எய்ட்ஸ்' நோயாகும். மற்றது பேரழிவைத்தந்து மனிதகுலம் முழுமைக்குமே நிரந்தர முடிவைத் தந்துவிடக்கூடியதான அணுஆயுதங்களாகும்.

அணுஆயுதம் ஏற்படுத்தக்கூடிய பேரழிவின் ஒருதுளியை இரண்டாம் உலகப்போரின் இறுதிக்கட்டங்களில் உலகம் சந்தித்த அனுபவ அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடாத நிலையில், இன்னுமொரு அணுஆயுத யுத்தத்தைச் சந்திக்கக்கூடிய திராணி உலகிற்கு கிடையாது என்றே கூற வேண்டும். வல்லரசுகள் தமது வல்லாதிக்க ஆற்றலின் வலிமையை உணர்த்தி நிற்க, அணுஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருந்தாலும் அணுஆயுதப் போரொன்று ஆரம்பமாகுமேயானால், 'வென்றவன் கரி, தோற்றவன் சாம்பல' என்ற நிலையே மிஞ்சும் என்ற அச்சம் அவற்றிடம் உறுதியாக நிலைத்திருப்பதால், உடனடி ஆபத்து வரக்கூடிய சாத்தியம் மிகமிகக் குறைவு என்றே கூறவேண்டும். அப்படியொன்றை ஒருநாடு ஆரம்பித்தாலும் தனக்குத்தானே சமாதியை, சாம்பல் மேட்டில் கட்டும் முட்டாள் தனத்தின் உச்சக்கட்ட செயற்பாடாகவே அது இருக்கமுடியும்.

ஆனால், 'எய்ட்ஸ்' ஆட்கொல்லி நோயானது மனித குலத்திற்குள் ஊடுருவி, அவர்களை உள்ளிருந்தே கொல்லும். தோற்கடிக்கவே முடியாத யுத்தத்தை முழுமூச்சுடன் ஆரம்பித்துவிட்டது.

இந்த யுத்தத்தில், 'எய்ட்ஸை' உள் ஊடுருவவிட்டு அதனை முறியடிக்கலாம் என நினைத்தால் அதைப்போல அறிவிலித்தனம் வேறெதுவுமே கிடையாது.

இன்றைய நாளில் எய்ட்ஸ் ஆக்கிரமிப்புக்குள் சிக்கியுள்ள லட்சக்கணக்கிலான உலகமக்கள் உயிருடன் இருக்கையிலேயே, திகதி மட்டும் குறிப்பிடப்படாத தமது மரண அத்தாட்சிப்பத்திரங்களை தமது கைகளில் சுமந்து திரிபவர்களாக, பரிதாபத்திற்குரிய மக்களாக, நடைப்பிணங்களாக உலா வருவதுதான் மாபெரும் வரலாற்றுத் துயரமாகும்.

அணுஆயுதங்கள், அதுவும் தற்கால அணுஆயுதங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் கணப்பொழுதில் மனித குலத்தை நிர்மூலமாக்கிவிடும் என்பது வெளிப்படையான விடயம். ஆனால், 'எய்ட்ஸ்' நோயோ, தான் ஆக்கிரமித்த மனிதன் ஒவ்வொருவனையும் அணுஅணுவாக, மரணம்குறித்த அவல உணர்வை ஏற்படுத்தி, உளவியல்ரீதியாக சமூகமட்டத்தில் கூனிக்குறுக வைத்தே கொல்லும் தன்மை கொண்டதாகும்.

அந்த நோய்க்கான மாற்று மருந்தை இன்றுவரை மெய்ஞானமும் விண்டுரைக்கவில்லை, விஞ்ஞானமும் கண்டுரைகக வில்லை.

அறிவியலின் உன்னதங்களை, சிகரங்களை எட்டிவருகின்ற மனித குலம், தனது அறிவீனத்தால், பலவீனத்தால் தம்மைத்தாமே படுகுழிக்குள், அதுவும் எந்த வகையிலும் மீட்சியே காணமுடியாத மரணக்குழிக்குள், வீழ்த்திக்கொள்வதென்பது தனது பகுத்தறிவின் மேன்மையையே பரிகாசிப்பதாகிவிடும்.

'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்டவன் எத்தகைய மேன்மை மிகு ஆற்றலை, வியத்தகு திறமையைக் கொண்டவனாக இருந்தாலும் சுயமதிப்பீட்டில் கூட, மனித அடையாளங்களைத் தொலைத்துவிட்ட ஒருவனாக தன்னுள் தானே தாழ்ந்து போனவனாகிவிடுவான் என்பதை சமகாலச் சம்பவங்கள் உணர்த்திநிற்பதுடன், ஏனைய மனிதருக்கு ஒரு எச்சரிக்கையாவும் இருக்கிறான் என்பது தான் உண்மை.

'எய்ட்ஸ்' தொடர்பான விழிப்புணர்வை இங்குதான் மனிதன் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த ஆட்கொல்லி நோய்க்காளானவர், அருவருக்கத்தக்க ஒருவரேயல்ல, அனுதாபத்திற்கும், இரக்கத்திற்கும் உரிய ஒருவரே, அவர் எதிர்பார்க்கும் அன்பையும் கருணையையும் வழங்குவது மனித உணர்வுடைய ஒவ்வொருவரினதும் மனித அடையாளத்தை நிரூபிக்கும் ஒன்றாகும்.

இன்று இந்த நோய்க்கான காரணிகள், விளங்கப்படுத்திக்கூறவேண்டிய விடயமல்ல. மிகவும் வெளிப்படையான ஒன்றேயாகும்.

நல்ல கலாசாரம், மதிக்கவைக்கும் பண்பாடு, தெளிவான சிந்தனை, நிதானமான நடத்தைகள், பலவீனங்களை புறந்தள்ளும் மனோபலம் இவையிருந்தால் போதும் 'எய்ட்ஸ்' தொடர்பாக அச்சமின்றி வாழமுடியும்.

எனினும் 'எய்ட்ஸ்' குறித்த விழிப்புணர்வு இன்னும் போதுமான அளவுக்கு மக்கள் மத்தியில் ஏற்படவில்லை என்பதும் வருத்தத்துக்குரிய விடயமே.


இந்த நோயின் தாக்கம் ஆரோக்கியமான சிந்தனையும் கல்விதொடர்பான ஆளுமையும் கொண்ட நம் மக்களிடையே, மெல்ல மெல்ல அதிகரிப்பது போன்ற சமிக்ஞைகள் தெரிய ஆரம்பித்திருப்பதே இந்த அச்சத்துக்கு காரணமாகும்.

சிறுவெள்ளம் பெருவெள்ளமாகி எல்லாவற்றையும் மூழ்கடிக்கும் நிலை ஏற்படாமல் பாதுகாப்பது நமது அறிவுசார் சமூகத்தின் பெரும் பொறுப்பாகும்.

இன்றைய 'எய்ட்ஸ்' தொடர்பான விழிப்புணர்வு நாட்கள் அறிவுறுத்தும் செய்திகள் எமது மக்களுக்கு அவசரமானதும், அவசியமானதுமாகும்.

'எய்ட்ஸ்' கொல்லும் நோய், அதைவெல்ல மருந்தோ மாயமோ கிடையாது. மனோபலமும், விழிப்புணர்வும் மட்டுமே நம்மை அதன்பிடிக்குள் சிக்கவைக்காது பாதுகாக்கும்.

## நாடும் நடப்பும்




### சமாதான நடவடிக்கையின் பின்னர்

# மக்கள் மீதான இராணுவத்தினரின் துன்புறுத்தல்கள் குறைந்துள்ளன

### யாழ். மாவட்ட மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரி பெரூஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து யாழ்.மாவட்டத்தில் மக்கள் மீதான இராணுவத்தினரின் துன்புறுத்தல்கள் வெகுவாகக் குறைந்துள்ளது என, யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பணிபுரியும் துன்புறுத்தல்கள் தொடர்பான விசாரணை அதிகாரி பெரூஸ் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதை அடுத்து, சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பமானது. இதனையடுத்து படிப்படியாக இராணுவத்தினர், பொலிஸார் தொடர்பான முறைப்பாடுகள் குறையத்தொடங்கின.

2001 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சித்திரவதைகள் சம்பந்தமான பதிவுகளில் - 90 வீதமானவை இராணுவம், பொலிஸார் மேற்கொண்டவையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆனால், 2002 ஆம் ஆண்டு மிகவும் குறைந்தளவான முறைப்பாடுகளே கிடைத்திருந்தன. அது இந்த ஆண்டு மேலும் குறைவடைந்துள்ளமை மகிழ்ச்சியை அளிக்கிறது.

மிக முக்கியமாக, மனிதஉரிமைமீறல் தொடர்பாக படையினர் சம்பந்தமாகக் கிடைத்துவந்த விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பே எம்மிடம் உள்ளது.

இந்த ஆண்டு இடம்பெற்ற படையினர் தொடர்பான மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களில் - கடந்த மாவீரர்தின நிகழ்வு காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள், இராணுவ ட்ரக் வண்டி விபத்தின்பின் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் யாழ். நகரப்பகுதியில் பத்திரிகை விற்றவர் மீதான துப்பாக்கிப் பிரயோகம் முதலான முறைப்பாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் இருந்தாலும், முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் இராணுவம் தொடர்பான மனிதஉரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் குறைவாகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### பிரதேச செயலர் தாக்கப்பட்டதைக் கண்டித்து

# மூன்றாவது நாளாகத் தொடர்கின்ற பிரதேச செயலர்களின் போராட்டம்!

(கொழும்பு)

புளத்சிங்கள பிரதேச செயலர் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து நாடளாவியரீதியில் பிரதேச செயலர்கள் நடத்தும் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

பல்வேறு பிரதேச செயலர்களும் ஏனைய அலுவலர்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பலவேறு இடங்களில் மறியற்போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலான பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வார இறுதி நாளாகையால் - நேற்று தமது பணிகளை மேற்கொள்ளவந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

இதற்கிடையில், இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதமரால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு அறிக்கைகள் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், அவை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வுகள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# திருடர் தொல்லையால் கோவிலுக்கு இரும்புவேலி

கோவிலில் தொடர்ச்சியாக இடம்பெற்ற திருட்டு சம்பவங்கள், திருட்டு முயற்சிகளை அடுத்து - கோவில் மதிலின் மேற்புறம் பாதுகாப்பிற்காக .இரும்புவேலி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையானது கொக்குவில் தலையாழி வைரவர் கோயிலில் இடம்பெற்றுவருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இந்தக் கோவிலில் தொடர்ச்சியாக உண்டியல் திருட்டு இடம்பெற்றுவந்ததாகவும், அண்மையில் உண்டியலினை திருடிய திருடர்கள் பணநோட்டுக்களை எடுத்துக்கொண்டு, சில்லறைகளுடன் உண்டியலை கோவிலுக்கு அருகில் விட்டுசென்றுள்ளனர். கடந்த கார்த்திகை திருவிழா அன்று இரவு கோயிலினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து ஐம்பொன்னால் ஆன பிள்ளையார் சிலையினை திருடிச்சென்றுள்ளனர். கோவில் நிர்வாகத்தினர் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் இது தொடர்பாக அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இந்தப் பகுதியில் திருட்டு முயற்சிகள் இடம்பெறுவது அதிகரித்துள்ளமையினால் கோயில் நிர்வாகத்தால் கோயில் மதிலின் மேற்புறம் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுவருகிறது. (205)

# நல்லூார் பிரதேச செயலகத்தில் ஊனமுற்றோர் கௌரவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஊனமுற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு - நேற்று நல்லூர் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்ட ஊனமுற்றோர்கள் கௌரவிக்கப்படடனர். நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு உடுபுடவைகள், கேள்கருவிகள் முதலியன வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலர் வி.முருகையா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லூர்க்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கலந்துகொண்டார்.

ஸ்ரீகாயத்திரி கமலா குருகுல சிறுவர்கள் கலைநிகழ்வுகளை நடத்தினர்.

நிகழ்வுகளை நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமூகசேவை உத்தியோகத்தர் என்.சண்முகலிங்கம் ஒழுங்கு செ து நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாரநோக்கு

# சிரித்துப் பேசி சமாளிக்க முயல்கிறாரா குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதி

"இந்தியா எம்மைக் கைவிட்டால், நாம் இந்தியாவைக் கைவிடவேண்டிவரும்". நான் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சராக இருந்த போதும், புலிகளின் தலைவர் பிரபாகரனை ஆதரிக்கிறேன். தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய காலம் வந்து விட்டது."


"படையினரின் எத்தகைய அத்துமீறல்கள் குறித்து எனக்குத் தெரியப்படுத்தினால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத்தினர் பற்றிய மக்களின் நல்லெண்ணம் வலுப்பெறவேண்டும்". இவை கடந்த வாரம் குடாநாட்டு அரசியல் அரங்கில் எதிரொலித்த கருத்துக்களாகும். இந்தக் கருத்துக்களின் ஆழத்தையும், அவற்றின் பின்னாலுள்ள செய்திகளையும் சாதாரணமாக எடைபோட்டுவிடமுடியாது.

ஏனெனில், இந்தக் கருத்துக்கள் வெளிப்பட்டு நிற்கும் இடங்களை வைத்துப் பார்க்கும்போது, இந்தக் கருத்துக்கள் கனதியானவையாகவே படுகின்றன. முதலாவது கருத்து - மலையக மக்கள் முன்னணித் தலைவரும், சமூக நலத்துறை அமைச்சருமான சந்திரசேகரனால் தெரிவிக்கப்பட்டவை. இரண்டாவது கருத்து- யாழ். மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலவினால் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சியில் இலங்கையின் இரு பெரும் அரசியற்கட்சித் தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகளும், சமரச முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன.

தற்போது நாடாளுமன்ற ஆட்சிமூலமாக நாட்டை ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் - நிறைவேற்று அதிகாரமெனும் ஒரு வகையான சர்வாதிகார ஆட்சி மூலம் நாட்டை ஆட்டிப்படைக்க முயலும் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகாவுக்கும் இடையே இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதில் உள்நாட்டு தலைவர்கள் சிலர் மட்டுமல்லாது, சர்வதேசரீதியாக வல்லமை பொருந்திய நாடுகள் சிலவும் முயன்றுவருகின்றன.

இவர்களின் முயற்சி வெற்றியளித்து, இணக்கப்பாடொன்று ஏற்பட்டு, அந்த இணக்கபாடு தேசிய அரசொன்றுக்கு வழிவகுக்குமாக இருந்தால், அரசியல் களத்தில் சில அதிர்ச்சி



தரும் மாறுதல்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உண்டு.

தற்போதுள்ள அரசியல் யாப்பே நாட்டின் இனப்பிரச்சினைக்கும், தமிழர்களின் விடுதலைப போராட்டம் வலுப்பெறவும் காரணமாக அமைந்ததாகக் கருதப்படுகிறது. அந்த நிலையில், அரசியல் யாப்பை மாற்றியமைப்பதன் மூலமாகவே - நாட்டில் சுதந்திரத்திற்குப் பின் தீராத வியாதியாக உருப்பெற்ற இனமுரண்பாட்டுக்கு நீடித்த, நிலையான, சாதகமான தீர்வைக் காணமுடியும் என்பது தெளிவான உண்மைநிலை.

அரசியல் யாப்பை மாற்றுவதாக இருந்தால், ஆட்சிக்கு வரும் அரசு - மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறவேண்டுமென்பது அவசியமானது. தற்போது எழுந்துள்ள நெருக்கடியான சூழ்நிலையில் பிரதமர் ரணிலாலும், சந்திரிகாவாலும் அவ்வாறானதொரு பலத்தைப் பெற்றுக்கொள்வதென்பது குதிரைக் கொம்பான விடயம். எனவே, இரண்டு பெரும் அரசியற்கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்து - அதன் மூலமே அரசியல் யாப்பை மாற்றமுடியும். இது எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், தேசிய அரசு என்பது சிறுபான்மை கட்சிகள் சிலரிடையே ஏக அச்ச உணர்வை தோற்றுவித்துள்ளது என்பதுதான் யதார்த்தமான விடயம்.

இந்த அச்சம் அமைச்சர் சந்திரசேகரனுக்கும் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே, யாழ். மணணில் வைத்து தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார். தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடுவதன் மூலமாக, நாற்பதுக்கும் மேற்பட்ட ஆசனங்களை நாடாளுமன்றத்தில் தக்கவைத்துக் கொள்ளமுடியும். அதன்மூலமாக, தனியரசு அமைக்கும் கட்சியோ, தேசிய அரசு அமைக்கும் கட்சிகளோ தமிழர்களுடைய காலில் விழவேண்டிவரும். அதன்மூலமாக, சரித்திரத்தையே மாற்றியமைக்கமுடியும். ஜே.வி.பி. போன்ற இனவாதக்கட்சியால் பதினைந்துக்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெறமுடியுமாக இருந்தால், எம்மால் ஏன் நாற்பதுக்கும் மேலான



ஆசனங்களைப் பெறமுடியாது எனக் கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் சந்திரசேகரன். அவரது அவா கனவாகப் போய்விடக்கூடாது என்பதே அனைவரது விருப்பமுமாகும்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் ஒருவரால்தான் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியு

> **"இந்தியா எம்மைக் கைவிட்டால், நாம் இந்தியாவைக் கைவிடவேண்டி வரும். நான் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சராக இருந்தபோதும் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஆதரிக்கிறேன். தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய காலம் வந்துவிட்டது".**
>
> **-அமைச்சர் சந்திரசேகரன்-**

மெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதோடு - தான் இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சராக இருந்தாலும், தலைவர் பிரபாவை ஆதரிப்பதாக வெளிப்படையாகவும், தெளிவாகவும் கூறியிருக்கிறார். தற்செயலாக தமிழ்நாட்டு அரசியல்போல இங்கிருந்தால் - பொடாவால் படாதபாடு படவேண்டி வந்திருக்கும்.

அடுத்த விடயமாக - புதிய யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியின் கூற்றுக்களும் குடாநாட்டு மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையுணர்வை ஊட்டியிருக்கிறது. அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிபர் தலைமையிலான அதிகாரிகள் குழு ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியபோது, பல முக்கிய விடயங்களை இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார். ஆனால், எந்தவொரு விடயத்திலும் விட்டுக்கொடுப்பதாகத் தெரியவில்லை.

> **"படையினரின் எத்தகைய அத்துமீறல்கள் குறித்தும் எனக்குத் தெரியப் படுத்தினால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத்தினர் பற்றிய மக்களின் நல்லெண்ணம் வலுப்பெறவேண்டும்.**
>
> **-இராணுவத்தளபதி சுசில் சந்திரபால-**

ஆனால், அது எமது அதிகாரிகள் மக்கள் மத்தியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், இராணுவத்தளபதியின் கவர்ச்சிகரமான கருத்துக்களும், நெருங்கிப் பழகும் சுபாவமும் அதற்கு திரைபோட்டு விட்டது என்றுதான் படுகிறது.

சந்திப்புக்கள் ஒவ்வொன்றின்போதும் மக்கள் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நேரடியாக முகத்திற்கு நேரே தட்டிக்கழிக்காமல், அவை தொடர்பாக ஆராய்வதாகத் தெரிவித்தமை தளபதியின் ராஜதந்திர மூளையை நன்கு வெளிப்படுத்துகிறது. இந்த விடயம்தான் முன்னாள் தளபதி சரத் பொன்சேகாவிற்கும் இவருக்குமிடையேயுள்ள பாரிய வேறுபாடாகும். நேருக்குநேர் கருத்துக்களை மறுப்பது பொன்சேகாவின் பாணியாக இருந்தால்- அவற்றைக் கவனமாகச் செவிமடுத்துப் பரிசீலிப்பதாகக் கூறி, கிடப்பில்போடுவது தற்போதைய தளபதியின் பாணியாக இருக்கலாம்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தபோது, அதற்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து, வேறுவிதமாக பதிலளித்து நைசாக நழுவியுள்ளார். வலிகாமம் வடக்குப் பகுதியில் ஏற்கனவே படையினரால் விடுவிக்கப்பட்டுள்ள அறுநூறு மீற்றர் தூரத்திற்குள் உள்ள வீடுகளில் மக்களை குடியமர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி அரச அதிகாரிகளையும், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால், இப்பகுதியில் குடியமரச் சென்ற மக்களில் பலர்- படையினரால் மிரட்டப்பட்டதுடன், விரட்டப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பொன்னாலை, புன்னாலைக்கட்டுவன், வயாவிளானுக்கு அண்மித்த பகுதியான குட்டியப்புலம் ஆகிய இடங்களில் குடியமர்ந்த, புதிதாக வீடுகளை அமைத்த மக்கள் - படையினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி சொந்த இடத்தில் குடியேறத் துடிக்கும் தமது அவாவிற்குத் தடைபோட்டுள்ளனர். இந்த விடயங்களைப் புதிய இராணுவத்தளபதி அறிந்திருக்க நியாயமில்லையென்றும் சொல்லிவிடமுடியாது.

எனவே, இந்த அச்சுறுத்தல்களுக்குப் புதிய தளபதி முடிவுகாண முயலும்போதுதான், விடுவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் குடியேறுவதும், புதிய தளபதிமீது நம்பிக்கை கொள்வதும் சாத்தியமாகும். இராணுவத்தினர் தொடர்பான எத்தகைய முரண்பாடுகளையும் தனக்குத் தெரியப்படுத்துமிடத்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்திருக்கும் சந்திரபால, உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் படையினருக்கு எதிராக மககளால் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றிக்குச் செய்யப்பட்டிருக்கும் முறைப்பாடுகளுக்கு உரிய தீர்வைகாண முயல்வாராக இருநதால், அது வரவேற்கத்தக்கதாக அமையும்.

அதைவிடுத்து, வெறும் வாய்ச்சொல்லால் மட்டும் மக்களை கவர்வதற்கு முயற்சிப்பாராக இருந்தால், அடக்குமுறைகண்டு பொங்கியெழும் யாழ்ப்பாண சமூகம் - சும்மா இருந்து விடாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

கச்சாய் பகுதியில் மீனவர்கள் வள்ளத்தில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும். எழுதுமட்டுவாலிலுள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னங்காணிகளில் இருந்து அறுவடையைப் பெற்றுவர அனுமதிக்கவேண்டும், அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியை அகற்ற வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு- அந்தப் பகுதியிலுள்ள இராணுவ அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு விசாரித்த பிற்பாடே முடிவு எடுக்கமுடியும் என்பது நம்புவதற்கு சங்கடமான விடயமாகும். இத்தகைய சாதாரண விடயங்களில்கூட முடிவெடுக்கும் சக்தி தன்னிடம் இல்லையென இராணுவத்தளபதி தெரிவிக்கின்றாரா? அல்லது மக்களின் எதிர்ப்பில் இருந்தும், ஜனாதிபதியின் எதிர்ப்பில் இருந்தும் தன்னைக் காப்பாற்ற முயல்கிறாரா என்பது விளங்காத விடயமாகவுள்ளது.

மேலே, விடுக்கப்பட்ட கோரிக்கைகளில் எவையுமே படையினரின் பாதுகாப்பிற்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தல்களாக இருக்க முடியாது. அனைத்துமே ஒரு நாளின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான அனுமதியை வழங்கும் விடயங்களே. இவற்றிற்கு தீர்வு தரமுடியாத நிலையிலுள்ள தளபதி, எவ்வாறு உயர் பாதுகாப்பு வலயமெனும் நீடித்த பிரச்சினைக்குத் தீர்வு தருவார் என எமது மக்கள் நம்பிக்கையோடு காத்திருப்பது?

பாடசாலைகளுக்கு அருகிலே, குறிப்பாக பெண்கள் பாடசாலைகளுக்கு அருகிலே படையினரின் இராணுவ முகாம்கள் அமைந்திருப்பது தொடர்பாக ஆட்சேபிக்கப்பட்டபோது, பாட்சாலைகளுக்கு அருகிலே இராணுவத்தினர் இருப்பது எவ்வளவு மகிழ்வான விடயம். பாதுகாப்புக்கு உத்தரவாதம் இருக்குமே எனத் தெரிவித்துள்ளமையானது சிரிக்க வைத்தாலும், சிந்திக்கவும் வைக்கிறது.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்பதனால்தான் படையினரின் முகாம்களை அகற்றச் சொல்லும்போது, படையினர் பாதுகாப்பாக இருப்பார்கள் எனச் சிரித்தபடி தளபதி கூறுகின்றார். பள்ளிச் சீருடையிலேயே மாணவி கிருஷாந்தியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி, பாடசாலை மாணவன் சஞ்சீவனைச் சித்திரவதைசெய்து சுட்டுக்கொன்று, பல்கலைககழக மாணவன் திவ்வியனை கைதுசெய்து சிறையிலடைத்த இராணுவம் - எவ்வாறு மாணவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கமுடியும் என்பதுதான் வியப்பாகவுள்ளது.

முகமாலைச் சோதனைச் சாவடியையும் மாலை ஏழு மணி வரை திறந்துதிருப்பது தொடர்பாக படையினர் ஒத்துழைக்க வேண்டுமென்ற கோரிக்கையொன்றும் இராணுவ தளபதியிடம் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலளித்த தளபதி அந்த விடயம் தொடர்பாக முடிவெடுக்க வேண்டியது பாதுகாப்பு அமைச்சு எனவும் தன்னால் எழுதவும் முடியாது என்ற பாணியிலும் பதிலளித்துளார்.

ஆனால், இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் ஏற்கனவே பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள். தமது சம்மதத்திற்கு அறிகுறியாக நத்தார் தினத்தை முன்னிட்டு, தமது சோதனைச் சாவடிகளை இரவு 9.30 மணி வரையும் திறந்துவைத்தார்கள். ஆனால் படையினரோ 6.30 மணியுடனேயே பாதையை மூடி தமது கடமையை முடித்துக்கொண்டனர்.




பண்டிகைக் காலத்திலே ஓரிரு நாட்கள்கூட பாதையை கூடியநேரம் திறந்திருக்க மறுக்கும் படைத்தரப்பு தினமும் ஏழு மணிவரை திறந்திருக்க சம்மதிக்குமா? அல்லது போனால் பாதுகாப்பு அமைச்சு - குறிப்பாக தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி சந்திரிகா சம்மதிப்பாரா?

நத்தாருக்கே பாதையைத் திறவாதவர்கள் செத்தாலும் இனி ஏழு மணிவரை திறவார்கள் எனவும் அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகத் தன்மீதான தமிழ்மக்களின் நம்பிக்கையை இழந்து நிற்கும் ஜனாதிபதி- இராணுவ அதிகாரிகளின் இடமாற்றங்களின் மூலம் சரிந்துபோன தமது செல்வாக்கைத் தூக்கி நிறுத்தமுயல்கின்றார். அதனாலேயே- இறுக்கமான, கடும்போக்குடைய சரத் பொன்சேகாவை சுற்றி இராணுத்தினர், காடையருமே நிற்கத்தக்க வகையில், அவரைத் தொண்டர் படைத்தளபதியாக்கி, சிரித்துப் பேசி காய் நகர்த்தும் வல்லமைமிக்க சந்திரபாலவை குடாநாட்டிற்குத் தளபதியாக நியமித்திருக்கின்றார். அவரது திட்டம் எவ்வளவு தூரம வெற்றிபெறும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

**யாழவன்**

# தற்கொலைத் தாக்குதலையடுத்து எல்லையை மூடியது இஸ்ரேல்!



(ஜெருசலேம்)

இஸ்ரேலியக் ஹெலிகொப்டர்கள் பலஸ்தீனத்தின் காஸாப் பிரதேசத்தில் மேற்கொண்ட தாக்குதலில் 'இஸ்லாமிக் ஜிகாத்' அமைப்பின் தலைவர் மெக்லெட் ஹமீட் மற்றும் அவரது இரண்டு பாதுகாவலர்கள் உட்பட நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பழிவாங்கும்முகமாக பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய நகரான டெல்அவிவிற்கு அருகில் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் 4 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதை அடுத்து, கடந்த இரு மாதங்களாக தற்கொலைத் தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 3 பெண்களும், ஒரு ஆணும் கொல்லப்பட்டனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

தாக்குதலுக்கு பலஸ்தீன விடுதலை முன்னணி என்ற அமைப்பு உரிமைகோரியுள்ளது.

இந்தத் தற்கொலைத் தாக்குதலை அடுத்து மேற்குக் கரை மற்றும் காஸாப் பிரதேசங்களின் எல்லைப் பகுதியுடனான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டிருப்பதாக, இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் சயூல் மொபாஷ் அறிவித்துள்ளார்.



கிறிமஸ் தினத்தை முன்னிட்டு பெத்தலகேம் நகருக்கு மக்கள் விஜயம்செய்வதற்காக இஸ்ரேலில் தளர்த்தப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், தற்போதைய தற்கொலைத் தாக்குதலை அடுத்து அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பொடா சட்டத்தின் கீழ் கைதான தமிழர் தேசிய இயக்க பாவாணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த - புதுக்கோட்டை பாவாணன் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசியதாக கடந்த ஆண்டு தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த நெடுமாறன், சு.ப.வீரபாண்டியன், பாவாணன் உள்ளிட்டோர் கைதுசெய்யப் பட்டிருந்தனர். கடந்த வாரம் இவர்களுக்குப் பிணை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

527 நாட்கள் சிறையில் வாடிய பாவாணன், நேற்றுக் காலை 9.30 விடுதலைசெய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவரை வரவேற்க அவரது ஆதரவாளர்கள் திருச்சி மத்திய சிறை முன்பு குழுமியிருந்தனர்.

ஆனால், மதியம் 1 மணிவரை விடுவிக்கப்படாததால், அவரது ஆதரவாளர்கள் அரசிற்கு எதிராக கோஷங்களை எழுப்பி, சிறைச்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர் 1.30 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவு கிடைக்காததால்தான் அவரை விடுவிக்கத் தாமதமானது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் மதுரை வந்திருந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன், மத்திய சிறைச்சாலைக்குச் சென்று பாவாணனைச் சந்தித்தார்.

உயர் நீதிமன்றம் பிணை வழங்கியவர்களில் நெடுமாறனுக்கு வேறொரு வழக்கில் பிணை கிடைக்காததால் அவர் மட்டும் இன்னும் சிறையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே பொடா வழக்கில் கைதாகி வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை, தயாரிப்பாளரும் மதிமுக பிரமுகருமான கலைப்புலி எஸ்.தானு சந்தித்துப் பேசினார்.

அதேபோல கட்சியின் அவைத் தலைவர் எல். கணேசன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளும் வைகோவை சந்தித்தனர். அப்போது பா.ஜ.க கூட்டணியில் தொடர்வது குறித்து அவர்களுடன் வைகோ ஆலோசித்ததாகத் தெரிகிறது.




## தமிழகத்தின் புதிய கூட்டணிக்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டதாம்

### தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடத் தமிழகத்தில் புதிய கூட்டணி அமைப்பதற்கான வேலைகளை ஆரம்பித்துவிட்டதாக - தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் நேற்று நிருபர்களிடம் அவர் கூறியதாவது,


புதிய கூட்டணி அமைக்கும் வேலைகள் ஆரம்பித்துவிட்டன. அது குறித்த விபரங்களை நான் இப்போது சொல்ல முடியாது. தேர்தலை எப்போது வேண்டுமானாலும் சந்திக்க தி.மு.க தயார்.

இந்த ஆண்டு இறுதியில் நடக்கவுள்ள மக்களவைத் தேர்தலை மத்திய அரசு முன்கூட்டியே நடத்த முடிவு செய்தால் அதையும் சந்திக்கத் தயார். மக்களவைக்கு முன்கூட்டியே தேர்தல் வந்தால் வரும். மார்ச் 6 ஆம் தேதி விருது நகரில் நடக்கும் தி.மு.க தென்மண்டல மாநாட்டிலேயே வேட்பாளர் பட்டியலை வெளியிடுவோம். அதிலேயே தேர்தல் அறிக்கையையும் வெளியிடுவோம் என்றார்.



காங்கிரசுடன் கூட்டணி அமைப்பீர்களா என்று நிருபர்கள் கேட்டதற்கு, எங்களுடன் கூட்டணி சேர எந்தக்கட்சியும் வரலாம். பேச்சு நடத்த எங்கள் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றார் கருணாநிதி.

## முஷாரப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் தற்கொலைதாரி ஒருவரின் உடல் இனங்காணப்பட்டதாக அறிவிப்பு!



பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பை கொலைசெய்வதற்காக தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட மூன்று தற்கொலைதாரிகளில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பாகிஸ்தானின் உள்நாட்டமைச்சர் பைசால் சலே தெரிவித்துள்ளார். ஆனால் அடையாளம் காணப்பட்டவரின் பெயர் விபரங்களை அவர் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, தற்கொலைத் தாக்குதல் நடைபெற்ற சில மணி நேரத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி முஷாரப் - பாகிஸ்தான் தீவிரவாதத்திற்கு எதிராக தீவிரமாகப் போராடுவதற்கு தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அல்கொய்டா மற்றும் தலிபான் அமைப்புக்களுக்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுப்பதாலேயே, அந்த அமைப்புக்கள் பாகிஸ்தான் மீது ஆத்திரமடைந்திருப்பதாக, பி.பி.சி செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

## விமான சேவையில் துப்பாக்கிதாரிகளை ஈடுபடுத்த முடிவு!

அவுஸ்ரேலியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையே சேவையில் ஈடுபட்டுவருகின்ற விமானங்களில் - துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்களைக் கடமையில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக, அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு ஏற்படும் செலவீனங்களை - அவுஸ்ரேலியாவின் தேசிய விமானசேவையான 'குவன்ராஷ"ம், சிங்கப்பூர் விமான சேவையும் இணைந்து பகிர்ந்து கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின் உள்ளூர் விமானசேவைகளில் அவுஸ்ரேலியா துப்பாக்கி தரித்த பாதுகாவலர்களை பணியில் அமர்த்தியுள்ளது.

இதேவேளை, ஜெமா இஸ்லாமியா என்ற தீவிரவாத அமைப்பின் தாக்குதல்களுக்கு தமது விமானங்கள் உட்படலாம் என்று சிங்கப்பூர் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இருபது ஜப்பானிய விமானப் படையினர் ஈராக்கிற்கு சென்றனர்



(ரோக்கியோ)

மனிதநேயப்பணிகளை மேற்கொள்ளவென, இருபது ஜப்பானிய விமானப் படையினர் நேற்று ஈராக்கிற்குச் சென்றனர்.

1000 துருப்புக்களை மனிதநேய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஈராக்கிற்கு அனுப்புவதற்கு ஜப்பான் தீர்மானித்துள்ளது.

இவர்கள் ஈராக்கின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளைப் புனரமைப்பது, வைத்திய உதவிகளைச் செயதல், குடிநீர் விநியோகத்தைச் சீர்செய்தல் உட்பட பல்வேறு மனிதநேயப் பணிகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் பிறநாடுகளுடன் யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கு படைகளை பயன்படுத்துவதில்லை என, ஜப்பானிய அரசியல் யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், போர் தவிர்ந்த பிற பணிகளில் ஈடுபடுவதற்கு படையினரை அனுமதிப்பதென, கடந்த யூலை மாதம் பிரத்தியேகமான சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.


## ஈராக்கில் 4 அமெரிக்கப் படையினர் பலி

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஈராக்கின் வட - கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

தாக்குதலில் காயமடைந்த ஆறு படையினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் சிகிச்சை பலனளிக்காது மரணமடைந்ததாகப் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

## செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட பிகல் 2 விண்கலத்தின் நிலையறிய விஞ்ஞானிகள் முயற்சிக்கின்றனர்!



செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்பட்ட 'பிகல் 2' என்ற விண்கலம் - கிறிமஸ்தினத்தன்று அங்கு தரையிறங்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், அந்த விண்கலத்திலிருந்து எந்தத் தகவல்களும் கிடைக்காததையடுத்து, தற்போது ஷெசயரில் அமைந்துள்ள ரேடியோ தொலைநோக்கிக் கருவிக்கு ஏதாவது சமிக்ஞைகள் கிடைத்துள்ளனவா என அவதானிக்கப்பட்டபோதும், அதற்கும் எதுவித சமிக்ஞையும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து, இந்த விண்கலம் செவ்வாய்க்கிரக மேற்பரப்புடன் மோதி விபத்துக்குள்ளாயிருக்கலாம் என, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினால் அனுப்பப்பட்ட செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப்பாதையில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் விண்கலம் - பிகல் 2 விண்கலம் தரையிறங்கத் திட்டமிட்டிருந்த இடத்தைக் கடக்கும்போது அதனுடன் தொடர்பினை ஏற்படுத்த விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சியும் வெற்றியளிக்காதுவிடின் அமெரிக்காவின் கலிபோர்னியாவின் ஸ்ரான் போட்டில் அமைந்துள்ள தொலைநோக்குக் கருவியின் மூலம் தொடர்பினை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

'ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்கு ஆசிய நாடுகள் சார்பில், தற்போதைய வெளியுறவு அமைச்சரான ரீரோன் பெர்னாண்டோ போட்டியிடப் போகிறாராமே..."

"ஓமோம் பேப்பரிலை பார்த்தேன்... ஐ.நா.வுக்கான இலங்கைத்தூதுவர் மகேந்திரன்தான் இதை அறிவித்திருக்கிறார்..."

"சமாதானத்தின்... அதுவும் உலகளாவிய சமாதானத்தின் சின்னமான ஐ.நா.சபைக்கு உள்நாட்டுக்குழப்பம், அரசியல் குழப்பம், மதக்கலவரம், இனக்கலவரம் என அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டு அமைதியற்று, சமாதானம் என்பது உதைபந்தாக அங்கும் இங்கும் அல்லாடிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டின் அமைச்சர் செயலாளர் நாயகமாக வந்தால், ஐ.நா.சபையில் உலகில் ஏற்படும் குழப்பங்களுக்கு அவர் [illegible]த் தீர்வைக் காண்பார்?"

"சரியாக் கேட்டாய்... முதல்ல தன்ரை நாட்டு மோதல்களுக்கு ஒரு சமாதானத்தைக் கொண்டு வந்து நிருபிச்சிட்டு ஐ.நா.சபைக்கு போனால் ஏற்றுக்கொள்ளலாம் தான்...ஆனால் ஆசிய நாடுகள் பலவும் அவரை ஆதரிக்கினமாமே..."

"ஆசிய நாடுகளில் எதிலதான் குழப்பம் இல்லாமல் இருக்கு எல்லாம் கிட்டத்தட்ட ஒரே மாதிரித்தான் அதாலை யார் போனால் என்ன எல்லாம் சரிதான் என்றும் நினைத்திருக்கலாம் தானே...!"

"ஆனால் ஜனாதிபதி ரீரோனை ஆதரிக்கமாட்டாரே... அவவின்ரை கதிர்காமருக்கு கொமன் வெல்த்தில... அதுதான் பொதுநலவாய நாடுகளின் தேர்தலில தோல்வி கிடைச்ச வெட்கத்தில இருக்கேக்க... ரணிலின், ரீரோனுக்கு ஐ.நா.வில பெரும் பதவி கிடைக்க அவர் விரும்பமாட்டார் தானே...!"

• "நீ சொல்வதிலையும் விசயம் இருக்கு பொறுத்திருந்து பாப்பம்... எண்டாலும் ஐ.நா.வையும் இனி ஆண்டவன் தான் காப்பத்த வேணும்போல கிடக்கு...!"

தெருவாசி

# பொலிஸ் அறிக்கையின் பின்பே சைக்கிள்கள் கையளிக்கப்படும்

பொலிஸ் அதிகாரியின் அறிக்கைக்குப் பின்பே நீதிமன்ற பாதுகாப்பிலுள்ள சைக்கிள்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் என, நீதிபதி இ.த.விக்கினராஜா தெரிவித்தார்.

அண்மையில் கல்வியங்காட்டுப் பகுதியில் நடைபெற்ற விபத்துச் சம்பவத்தின்பின், பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 29 சைக்கிள்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றை மீளப் பொறுவதற்காக 10 பேர் வந்தபோது, அவர்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு சென்று, வாக்குமூலம் அளிக்கும்படி பணித்த நீதிபதி, எதிர்வரும் 29 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிக்கை சமர்ப்பித்த பின், விசாரணைகளின் பின்பே சைக்கிள்கள் ஒப்படைக்கப் படும் என்று தெரிவித்தார். (ச)

## ஈரானில் பூமிஅதிர்ச்சி...

மேலும் 30 ஆயிரம் பேர்வரை இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்திருப்பதாகவும், தெரியவருகின்றது. இந்த நகரத்தில் இருந்த இரண்டு வைத்தியசாலைகளும் பூமியதிர்ச்சியால் அழிந்துவிட்டதால் காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தொலைபேசி, நீர் விநியோகம், மின்விநியோகம் என்பன முற்றாக சீர்குலைந்துள்ளதால் மீட்பு உதவிப் பணி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கட்டட இடிபாடுகளில் இருந்து காயமுற்றவர்கள் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டு வருகின்றபோதும், போதிய மருத்துவ வசதிகள் அளிக்க முடியாத நிலையில் அதிகாரிகள் திண்டாடுவதாகத் தெரியவருகிறது.

பாம் நகரைத் தாக்கிய பூமியதிர்ச்சி றிச்டர் அளவுகோலில் 6.3 எனப் பதிவாகியுள்ளது. தெஹ்றானுக்கு தென்கிழக்காக சுமார் 1000 கிலோ மீற்றர் தொலைவிலேயே பாம் நகரம் அமைந்திருக்கின்றது.

பூமியதிர்ச்சியால் தாக்கப்பட்ட பாம் நகரில் இருந்த 2000 ஆண்டு பழமை வாய்ந்த கோட்டை ஒன்று அழிந்துவிட்டதாகவும் 16, 17 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல கட்டடங்கள் சேதமுற்றுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த பூமியதிர்ச்சியில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி...

னையாளர் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து, தொலைபேசி சேவையினை சீரான முறையில் இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாவனையாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு அண்மையில் ஐந்நூறு தொலைபேசி இணைப்புக்கள் ரெலிக்கொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

## பிக்கப் வாகனம்..

கப்பட்ட நிலையில் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்துக்குள்ளான பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துத் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (201)

## தலை துண்டி...

தலை வெட்டப்பட்ட நிலையில் இருந்த சடலத்தின் தலை, அடையாள அட்டை கைப்பை என்பவற்றை கந்தன்குளம் சேவியர் கடைக்கு அண்மையாக் கண்டெடுத்தனர்.

கொலை செய்யப்பட்ட உரும்பிராய் கோப்பாயை நிரந்தர முகவரியாகவும், இலக்கம் 234, கட்சன் றோட் வட்டக்கச்சியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட இரத்தின சிங்கம் பிறின்சி (வயது 19) என இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

| சீட்டிழுப்பு இல: | 1576 | திகதி: | 26.12.2003 | | | |
|---|---|---|---|---|---|---|
| வெற்றி இலக்கங்கள் | | | | | | |
| B | 7 | 4 | 5 | 3 | 9 | 7 |

# மனித உரிமை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த கல்வி அமைச்சு பின்னடிப்பு!

மனித உரிமை ஆணைக் குழுவினால் கொடுக்கப்படுகின்ற பரிந்துரைகளில் பெரும்பான்மை யானவற்றை கல்வி அமைச்சுக்குரிய திணைக்களங்கள் நடைமுறைப்படுத்துவதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணத்தினால் மனித உரிமைகள் ஆணையகத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத அரசாங்கத் திணைக்களங்கள் தொடர்பில், நாடாளுமன்றத்தில் அறிக்கைகளை சமர்ப்பிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச திணைக்களங்களுக்கு எதிராக பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்றன. அவற்றில் பலவற்றிற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்குகின்றது.

இந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளில் 75 வீதமானவற்றை அரச திணைக்களங்கள் நடைமுறைப்படுத்துகின்ற போதிலும், 25 வீதமானவற்றை பின்பற்றுவதில்லை. இவற்றில் கல்வி அமைச்சுக்குரிய திணைக்களங்களே பிரதானமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக முன்னாள் தலைவருக்குப் பிணை!

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ நேற்று பிணையில் வடுவிக்கப்பட்டார்.

நிதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையைக் கருத்தில் கொண்டே கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்குவதாக கொழும்பு மேலதிக நீதவான் ரஞ்சன் திசநாயக்கா தெரிவித்தார்.

பொதுச்சொத்துக்கள், சட்டமூலத்துக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளாது, லஞ்சஊழல் சட்டத்துக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சுசந்த பெர்ணாண்டோ 30 ஆயிரம் ரூபா ரொக்கம், 5லட்சம் பெறுமதியான மூன்று சரீரப்பிணைகளுடன் விடுதலை செய்யப்பட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் 300 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்டுள்ளது.

## நத்தார் தினத்தன்று

# கலகத்தில் ஈடுபட்டோர் பிணையில் விடுவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தின்போது, கலகத்தில் ஈடுபட்ட 5 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பின் நீதிமனறால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு 1 மணியளவில், குருநகர் பகுதியில் குடி போதையில் இருந்த ஒரு குழுவினர், வீடொன்றை தாக்கியதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பொலிஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வாள் ஒன்றையும், இரும்புக் குழாய் ஒன்றையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருந்தனர். இவர்களை விசாரணைக்குட்படுத்திய நீதிவான் இ.த.விக்கினராஜா ஐவரையும், தலா ஐயாயிரம் ரூபா காசுப்பிணையிலும், 15ஆயிரம் ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

அத்தோடு ஐந்துபோரும் தினமும் யாழ். பொலிஸ்நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் எனவும், பிணையிலுள்ள காலப்பகுதியில் முறைப்பாட்டுக் காரருடன் பிரச்சனைகளுக்குச் செல்லக்கூடாது எனவும் உத்தரவிட்டார். இவ்வுத்தரவுகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில பிணை அனுமதி மறுக்கப்படும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

அத்தோடு இவர்களை ஆட்பிணையில் எடுப்பவர் யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை கிராமசேவையாளர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தனது உத்தரவில் தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளார். (ச)

# காலாவதியான பொருட்களை சுகாதார பரிசோதகர்கள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்கள் பல பொதுச்சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொதுச்சுகாதார அதிகாரி பிரிவிற்குட பட்ட கொக்குவில், நல்லூர் ஆனைக் கோட்டை ஆகிய பகுதிகளில் கடந்த 20 ஆம் திகதி மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போதே இப்பொருட் கள் சுகாதாரப் பரிசோதகர்களிடம் சிக்கியதாக, தெரிவிக்கப்படுகின்றது.

கடையொன்றிலிருந்து மட்டுமே 21 வகையான காலாவதியான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சொக்லேட் வகைகள், பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள், கோல் மன்ஸ் என்பன இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் முக்கியமானவையாகும்.

சிறுவர்கள் விரும்பி உண்ணும் சிச்சற் எனப்படும் இனிப்புவகை அடைத்துவரும் பெட்டியிலேயே காலாவதி திகதி தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதாலும் கடைகளில் இவை கண்ணாடிப்போத்தல்களில் வைத்து விற்பனை செய்வதால் சிறுவர்கள் பலர் அறியாது, இவ் இனிப்பு வகைகளை உட்கொள்வதனால் பாதிப்புக்குள்ளாக நேரிடும் என, பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

பதினொரு கடைகளிலேயே இவ் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

## மீதிப் பணம்...

தமக்கு 2 ரூபா மீதிப்பணம் தரவேண்டுமென கேட்டுள்ளார். எனினும் பஸ் நடத்துநர் மீதிப்பணத்தை கொடுக்க மறுத்துவிட்டார். இதன் காரணத்தினால் இருவருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதனால் பஸ் நடத்துநர் பயணியை பலமாகத் தாக்கி அவரை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பலமாகத் தாக்கப்பட்ட பயணியை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வைத்தியசாலையில் அனுமதிக்காது அவரிடம் முறைப்பாட்டைப் பெறுவதில் அக்கறை காட்டியமையினால், கடுமையாகத்தாக்கப்பட்ட முதியவர் மரணம் அடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## அதிகார இழுபறிக்கு...

இந்த விஜயத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் மிலிந்த மொறகொட ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு அரசியல் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## மீனவர்கள்...

மீன்பிடிக்கும் நோக்கோடு பெனடிக்ட் ரஞ்சன் (வயது 35), உதயகுமார் (வயது 37), ரவி (வயது 45), ஜெயக்குமார் (வயது 35) ஆகிய குருநகரைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் சென்றிருந்தனர். மறுநாள் காலை வரை வீடு திரும்பாத இவர்களைத் தேடி அவர்கள் பயணஞ்செய்த படகின் உரிமையாளர் அ.ஞானசேகரன் என்பவர் கடலுக்குச் சென்றபோது ஆழம்மிக்க நடுக்கடலில் படகு ஆட்களற்ற நிலையில் மோட்டார் இயந்திரம், மீன்பிடி வலைகள், திசையறி கருவிகள் ஏதுவுமற்ற நிலையில் காணப்பட்டது.

படகைக் கரைக்குக் கொண்டு சேர்த்துள்ள போதிலும் படகில் சென்றவர்கள் இன்னமும் கரைதிரும்பவில்லை.

மீன்பிடிக்கச்சென்று 5 நாட்களாகியும் காணாத உறவினர் கடலில் சென்ற இவர்களை மீட்டுத்தருமாறு கோரியே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## பயணிகள் பஸ் குடைசாய்ந்து...

பட்டபோது, தவறுதலாக கடலினுள் வீழ்ந்ததாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் அனலை தீவைச் சேர்ந்த பேரம்பலம் லச்சுமி (வயது 60) என்ற வயோதிப மாது உயிரிழந்ததுடன் இரு குழந்தைகள் உட்பட எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் நான்கு பேர் மாத்திரமே யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரம் வருமாறு - ஆணைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த சாம்பவி உதயகுமார் (வயது 3) அனலை தீவைச் சேர்ந்தவர்களான வ.நிதர்ஸன் (வயது 3), அவரது தாயாரான யோகராணி (வயது 30), எஸ்.செல்லையா (வயது 62), ஆகியோரே யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் சிறுகாயங்களுக்குள்ளானதால், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். விபத்துக்குள்ளான வாகனம் நேற்று மாலை வரை சம்பவ இடத்திலேயே மீட்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எய்ட்ஸ் குறித்த கருத்தரங்கு...

மராட்சி, தென்மராட்சி, தீவகம் என குடாநாட்டின் அனைத்து இடங்களிலும், மக்களின் வீடுகளுக்குச் செல்லுதல், பொதுஇடங்களில் கருத்தரங்குகள் எனப் பலவாறு இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்றன.

மக்கள் நெருங்கிவாழும் இந்த இடங்களில் இவ்வகையான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மக்கள் வரவேற்பதுடன், இந்த நோயினால் ஏற்படும் ஆபத்துக்களை உன்னிப்பாகக் கேட்டறிவதிலும் ஆர்வமாக உள்ளனர்.

எய்ட்ஸ் நோய் என்று மட்டும் அறிந்திருந்த மக்கள் அந்நோயினால் ஏற்படும் சமூக, பண்பாட்டு விளைவுகளை இவ்வகை விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலம் அறிந்து கொண்டுள்ளனர்.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் நேற்றும் ப.நோ.கூ.சங்க ஊழியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், சமுர்த்திப் பணியாளர்கள், தேசிய எழுச்சிப்பேரவையினர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.